DEUS MEUS ET OMNIA
C M S F

# பாதை
PAATHAI
FRANCISCAN MISSIONARY BROTHERS

ஆண்டவருக்கான வழியை
ஆயத்தமாக்குங்கள்
அவருக்கான பாதையைச்
செம்மையாக்குங்கள்
(மத் -3:3)

பாதை 09 | 2012 மாசி - வைகாசி (நண்பர்களுக்கு மட்டும்) | பயணம் 35

PUBLIC LIBRARY
JAFFNA
26 APR 2012



## ஈஸ்ரர் விழா நற் செய்தி

கிறிஸ்தவர்களின் விசுவாசம் அன்று காலியான கல்லறையில் கல் புரட்டப் பட்டிருப்பதை முதலில கண்ட சகோதர, சகோதரிகளின் சாட்சியத்தில்தான் அடிப்படையைக்கொண்டுள்ளது. இயேசுவின் கல்லறையைக் காவல் காத்த வீரர்களின் கண்களைக் கூச வைத்த ஒளியானது காலத்தையும் அண்டவெளியையும் ஊடுருவிக் கடந்து சென்ற தெய்வீக ஒளியாகும். இது சாவென்னும் இருளை ஒதுக்கி வைத்து இவ்வுலகிற்கு இறைவனின் சீர்சிறப்பு நிறை மகிமையை உண்மை மற்றும் நன்மைத் தனத்தை கொணர்ந்தது.

மனித குலம் இன்று பல்வேறு இழப்புகள் பசி, நோய், போர், வன்முறை ஆகியவைகளின் துன்ப நிலைகளில் இருந்தாலும் இதற்காகவே கிறிஸ்து பிறந்து இறந்து பின் உயிர்த்தெழுந்தார். இயேசுவின் உயிர்ப்பானது துன்பங்களை அனுபவித்து வரும் மக்களுக்கும், சமூகங்களுக்கும் விடுதலையின் நீதியின் அமைதியின் பாதையைத் திறந்து வைக்கின்றது. கிறிஸ்து உயிர்த்து விட்டார். அவர் உயிரோடு உள்ளார்.

நம்மோடு நடந்து வருகிறார். உலகம் முடியும் வரை நம்மோடு இருப்பார். எனவே இந்த காயமுற்ற உலகில் அல்லேலூயா வாழ்த்துப்பாடி அவர் பின்னே நாம் நடப்போம். உங்கள் அனைவருக்கும் எனது உயிர்ப்புப் பெருவிழா நல்வாழ்த்துக்கள்.

## குற்றங்களை ஏற்று நொந்து மன்னிப்புப் பெறுவதே சிறந்தது



### ஆயர் மல்கம் ரஞ்சித்

இலங்கையில் நிலையான இன ஐக்கியத்தை ஏற்படுத்த நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் போதுமானதல்ல. மாறாக அதற்கு அப்பால் சென்று செயற்பட வேண்டும். அது மட்டுமன்றி, செய்த குற்றங்களை ஏற்றுக் கொண்டு அதற்காக மன்னிப்பை பெற்றுக்கொள்வதே சிறந்தது என்று கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்தார்.

எமது தவறுகளை திருத்திக கொண்டால் சர்வதேச நாடுகள் ஒருபோதும் அழுத்தங்களைப் பிரயோகிக்கவோ சுட்டிக்காட்டவோ போவதில்லை. வரலாற்றில் தவறு செய்துள்ளோம் எனவே அதனை இலங்கை ஏற்றுக் கொண்டு பாதிக்கப்பட்ட சமூகத்தை அரவணைக்க வேண் டும். அவ்வாறு அல்லாது விமர்சிப்பவர்களையும் மாற்றுக் கருத்துக்களை உடையவர்களையும் விசேட சட்டங்களைப் பயன்படுத்தி தண்டிப்பதும் தேசத்துரோகிகள் என்று வர்ணிப்பதும் யதார்த்தமான போக்குடையதாக அமையாது. இதனால் நாடு மீண்டும் அழிவுகளின் அடிமைத் தனத் திற்கே செல்லும். எனவே அரசாங்கம் உணர்வுகளுக்கு அடிபணியாது புத்திக்கு வேலை கொடுகக வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

## தொழிலாளர் மே தினம்

உழைப்பால் உயர்ந்தவன் சிறப்பை நினைவுகூரும் தினமான மேதினம் உலகமே சாதி, சமய, மொழி, பேதமின்றி நினைவு கூரப்படுகிறது.

தொழிலாளரின் பாது காவலரான புனித சூசையப்பர் தினம் கிறிஸ்தவர்களால் கொண்டாடப்படுகிறது. தொழிலாளரின் மாதிரியாக தச்சுத்தொழில் செய்து மைந்தனான இயேசுவின் வாழ்விலும் இவர் ஓர் தச்சனின் மகனல்லவா? என உலகமே நினைவுகூரும் தொழிலின் சிறப்பு சகல தொழிலாளர்களின் பெருமைக்கு உயர்வானது.

கடின உழைப்புக்கு ஏற்ற ஊதியம் தொழிலாளர் உரிமைகள், அனுபவிக்கும் உரிமைக்குரலின் நாளாக கொண்டாடிய தினங்கள் அரசியலால் திசை மாறி கட்சி பிரசாரமாக மாறி வருவதற்கு பொறுப்புள்ள சமயங்களின் பொறுப்பற்ற திசை மாறும் போக்குகளும் காரணமாகலாம். உண்மைத் தொழிலாளி உயர்வடையும் எண்ணத்தைப் பிரதிபலிக்கும் நாளாக சிறக்க மேதின நல்வாழ்த்துக்களை உழைக்கும் வர்க்கத்தினருக்கும் தொழிலாளரின் பாதுகாவலராம் புனித சூசையப்பரின் நாமம் சூடியவர்களுக்கும் அமைப்புகளுக்கும் மே தின வாழ்த்துக் களைத் தெரிவிக்கின்றோம்.

உழைக்கும் வர்க்கத்தினராகிய
தொழிலாளர்களுக்கு
மே தின நல் வாழ்த்துக்கள்



## மட்டுநகரில் பிரான்சிஸ்கன் அருட்சகோதரர் சபை பணிவிழாவில் 30 ஆண்டு நிறைவு

பிரான்சிஸ்கன் மறைபரப்பு சகோதர சபையினரின் மட்டு நகர் குருக்கள் மட பணிகள் ஆரம்பிக்கப்பட்டு முப்பது ஆண்டுகள் நிறைவை வெகு சிறப்பாக நினைவுகூரப்படும் ஆண்டாக பல நிகழ்வுகளை முன் ஆயத்தம் செய்து வருகிறார்கள்.

மட்டுநகர் ஆயரின் அழைப்பை ஏற்று குருக்கள் மட அசீசியார் ஆலய பங்கு மக்கள் சார்பில் அருளப்பு மாஸ்ரரின் விடாமுயற்சியின் காரணமாக கால் பதித்து ஆன்மீக சமூகப் பணிகளால் பல்வேறு சவால்கள், போராக சுனாமியாக இடப்பெயர்வாக பல நெருக்கீடுகளுக்கு முகம் கொடுத்து மக்களோடு மக்களாகப் பயணித்த மனப்பதிவுகள் சிறப்பு மலராக உருவாக்கப்பட்டு வருகிறது

அசீசியார் ஆலய வளர்ச்சியுடன் புதுமெருகூட்டும் ஆலய ஆன்மீக முன்னெடுப்புக்களும் புதிய குடியேற்றத் திட்டங்களும் அசீசிபுர சிறுவர் இல்லப் பணிகளுடன் அயற்கிராம பணிகளும், மட்டுநகரில் பிரான்சீஸ்கன் அருட் சகோதர்களான அமரர் அருட்சகோதரர் போல் பீரிஸ் தற்போதைய சபையின் மாகாணத் தலைவர் அருட் சகோதரர் தொபிதாஸ் அவர்களுடன் ஆரம்பிக்கப்பட்டு பல அருட் சகோதரர்களால் மேற்கொள்ளப்பட்டு வரும் பணி வாழ்வு சிறக்க மக்களின் ஒத்துழைப்பும், மட்டுநகர் ஆயர்களின் நல்லாசியும் அருட் பணியாளர்களின் பக்கபலமான ஒத்துழைபபும முப்பது ஆண்டுப் பணி வாழவு சிறக்க இறையன்பில் நினைவும எழுச்சி விழாவாக 22.04.12 இல் ஆயரின் கூட்டு நன்றிப் பலியுடன் நினைவு கூரப்படுகிறது.

### கத்தோலிக்க கலை இலக்கிய வட்டம் நடாத்திய
## தாழ்ச்சியின் மாதிரியாக... போட்டிகள்

யாழ். கத்தோலிக்க கலை இலக்கிய வட்டத்தின் வெள்ளிவிழா ஆண்டை முன்னிட்டு "தாழ்ச்சியின் மாதிரியாக.." என்னும் கருப்பொருளில் ஓவிய, கட்டுரை, கவிதைப் போட்டிகள் நடாத்தப்பட்டது.

இறைவனின் தாழ்ச்சியின் மாதிரியாக செயற்பட்ட விழுமியங்கள் இன்றைய சூழலில்மக்கள் மட்டத்தில் சிந்தனைகளைத் தூண்டும் நோக்கில்இப்போட்டிகள் நடாத்தப்பட்டன.

இப்போட்டியில் மாணவர்கள் ஆர்வமுடன் பங்கேற்க ஊக்கமூட்டிய அதிபர்கள், ஆசிரியர்களின் ஆர்வமூட்டல் சமயவிழுமியங்களை இளையோர் மட்டில் விதைப்பதை உறுதிப்படுத்தியது பாராட்டுக்குரியது. முடிவுகள் உள்ளே...

தேடி தெரியும் அறிவைப்புகட்டும் பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்களின் ஊக்கமூட்டல் சமய விழுமியங்களை மாணவர்களிடையே விதைப்பது மட்டுமல்ல இன்றைய சூழலில் பாடசாலை மட்டத்தில் ஏற்பட்டு வரும் சமூகச் சீரின்மைகளை களைவதிலும் முன்நிற்கும் பொறுப்புள்ளவர்களை வெளிப்படுத்துவது சிறப்பம்சமாகும்.

## ஒளிரும் திரிகளாக மாறுவோம்

### அ.ம.தி ஸ்தாபகரின் விண்ணகப் பயண 150 ஆவது ஆண்டு நினைவாக அ.ம.தியாகிகளால் நடாத்தப்படும் இளையோர் - சிறுவர் மாநாடு

19.04.2012 அன்று அமலமரித் தியாகிகளால் யாழ். புனித பத்திரிசியார் மண்டபத்தில் நடாத்தப்படவுள்ளது. இம் மாநாட்டுக்கு முன்னோடி நிகழ்வுகளாக ஓவிய, கட்டுரை, கவிதைப் போட்டிகளும், சுலோக சிந்தனைகளும் யாழ். மாவட்ட கிராம மட்ட சிறுவர்கள் இளையோர் மட்டத்தில் நடாத்தப்பட்டு வருகிறது.

இன்றைய கால சமூக நெருக்கீடுகளில் மிகவும் அல்லலுறும் சிறுவர் இளையோருக்கான நல்லதொரு முயற்சியாக 'ஒளிரும் திரிகளாக மாறுவோம்' என்ற தொனிப்பொருளுடன் மேற்கொள்ளப்படும் முயற்சிகள் பாராட்டத்தக்கது.

செய்தி ஊடகங்களிலும், கருத்தரங்கள் ஒன்றுகூடல்களிலும் சிறுவர், இளைஞர் துஸ்பிரயோகங்கள் என கருத்துக் கூறுவதில் காலத்தைக் கடத்தாது பொறுப்புள்ளோரும், சமூக அமைப்புக்களும் இளையோருக்கான கருத்து வெளிப்பாடுகளுக்கும், சமூக, சமய விழுமியங்களை மேற்கொள்ளவும் சந்தர்ப்பங்கள் ஏற்படுத்துவதில் சகல மட்டத்திலும் முன்நிற்க வேண்டியது காலத்தின் தேவையாகும்.

குறைகளைக் கூறி, நிறைகளை வெளிப்படுத்த சந்தர்ப்பங்களை ஏற்படுத்தாத திருவிழாக்கள், சமூக அமைப்புகளின் செயற்பாடுகள், சிறுவர் இளையோரின் மன நெருக்கீடுகளை அறியவோ அவர்களின் ஆற்றல் திறன்களைத் தூண்டவோ, நம்பிக்கை வாழ்வை தூண்டவோ சந்தர்ப்பங்கள் ஏற்படுத்தப்படாத வரை சமூக சீரின்மையைத் தவிர்க்க முடியாது.

சமுதாயத்தை வழிநடத்தும் தனிநபர்கள், குடும்பங்கள் அமைப்புக்கள், வழிகாட்டிகளின் நல்முயற்சிகள் நல்லுறவாடல்கள் உள்ள சமூகத்தைக் கட்டியெழுப்பும் சூழலில் ஆரோக்கியமான ஆன்மீக விழுமியங்களைக் கொண்ட நற்சமூகத்தைக் கட்டியெழுப்ப முடியும் என்ற நன்நோக்கு ஒளிரும் திரிகளாக சமூகமே பிரகாசமான நற்சமூகத்தை உருவாக்க இம்மாநாடு சிறந்தோங்க வாழ்த்துகிறோம்.



அ.ம.தி.களின் சிறுவர் இளையோர் மகாநாட்டில் கலந்துகொண்ட மதத்தலைவர்களைக் காணலாம்.

இறை பாதை [illegible] இளைஞர்களே வாருங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதையின் பார்வையில்....

தவத்தின் வெற்றிதான், உயிர்ப்பின் மகிழ்வைத் தந்தது
இதுவே கிறிஸ்தவத்தின் பிறப்புமாகும்.
சொந்த வாழ்விலும் எதிர்கொள்ளும்
கவலைகள், சலனங்கள், சபலங்கள்
சுயத்தை மாற்றி விடுவதுண்டு
பச்சோந்திகளாக ஒதுங்கி விடுவதுண்டு
மனத்திடமுடன் இறை விசுவாச பலமுடன்
வெல்லும் ஒவ்வொரு கணமும்
உயிர்ப்பின் உணர்வை அனுபவிக்கலாம் என்பதே
இறைவனின் திருப்பாடுகள், மரணம், உயிர்ப்பு
எமக்கு கற்றுத் தந்த பாடமாகும்.

ஊனக்கண் உடையோருக்கு
இறப்பு ஓர் முடிவாகும்.
விசுவாசக் கண் உடையோர்
இறப்பை தாண்டிய உயிர்ப்பை உணர்வர்,
அனுபவிப்பர், அதுவே கிறிஸ்தவத்தின் வாழ்வுமாகும்.
இன்றைய உலகில் மகிழ்வைத்தேடும் மனங்கள்
அதனை அடைய, துன்பத்தை, தியாகத்தை, பகிர்வை
எதிர்கொள்ள தயங்குவதில்லை. சிலர்
சாவுக்குப் பயந்து சாத்தானின் வழியை தேர்ந்து
தற்காலிக மகிழ்வை உடன் அனுபவிக்கிறார்கள்
உயிர்ப்பில் மகிழ வேண்டுமானால்
இறைமகனின் துன்பத்தையும் உணரும்
ஆன்மபலம், நம்பிக்கை, விசுவாசம்,
வாழ்வாக வேண்டும்.
பிறரை வாழவைப்பதில் உயிர்ப்பை காணலாம்
விதை ஒன்று மண்ணில் வீழ்ந்து மடிந்தாலே
புதிய விருட்சம் உயிர்க்கிறது.
இதனை வாழ்வாக்கிய யேசுவின் சிலுவைப்பாதை
உயிர்ப்பின் உத்தானத்தால் மகிழ்வைத்தந்ததே
கிறிஸ்தவத்தின் சாட்சி வாழ்வு.
போர் முடிந்தது, போர்க்களம் மாறியது.
போரின் வடுக்கள் மாறவில்லை
போரின் வடிவங்கள் வேறானது
சுமைகளை தாங்கும் இதயங்கள்
சிலுவைப் பயணம் போல் தொடர்கிறது.
பணிசெய்யும் தியாகிகளாக
சமூக சேவகர்கள், சமய தலைமைகள்
சவால்களை எதிர்கொள்ளும் குடும்பங்கள்
பிறர் வாழ்வுக்கு தம்மை அர்ப்பணிக்கும்
ஒவ்வொருவருக்கும்
சுயபலமும், ஆன்மீக பலமும் நிறைவாக வேண்டும்
சாத்தானின் சூழ்ச்சிகள் பலவாக வடிவமெடுக்கிறது
உலக மயமாக்கலின் அடையாளமாக
இயந்திர மயமாக்கப்பட்ட உலகில்
சவால்களை சாதனையாக்க
ஆன்மீக விழுமியங்களை காக்கும்
பொறுப்புள்ளோர் பணிக்கு
மனமாற்றத்துடன் அர்ப்பணிப்போர்
அதிகமாக தேவைப்படுகிறார்கள்
இறைபாதையை செப்பனிட
உழைக்கும் உள்ளங்களின்
மனவலிமையை பலமாக்க
ஆன்மீக நெறியில் தாழ்ச்சியின் மாதிரிகளாக
தன்னைத் தாழ்த்திப் பணி செய்யும்
முன்மாதிரிகளே இன்றைய தேவை
யேசுவின் பாதையில் பயணிப்போராக
ஆன்மீக பலமுடன்
சீடர்களை உருவாக்கி உருவாகும்
ஒவ்வொரு செயலும்
உயிர்ப்பின் உத்தானத்தை வெளிப்படுத்தும்
இதுவே, 'இதை என் நினைவாகச்
செய்யுங்கள்' என்பதற்கு
உயிர்ப்பூட்டும் சக்தியாகும்
உயிர்ப்பின் உத்தான நல் வாழ்த்துக்கள்.

# தவக்காலமும் நாமும்

தவக்காலம் என்பது நம் கிறிஸ் தவ வாழ்வில் ஒரு புது ஆரம்பமாகும். நாற்பது நாட்கள் நீடிக்கும் இக்காலத்தினை விபூதிப்புதன் என்று தொடங்கி விட்டோம். ஒவ்வொரு கிறிஸ்தவனும், கிறிஸ்தவளும் தமது நாளாந்தம் வாழ்க்கையை இடை நிறுத்தி தன் கிறிஸ்தவ வாழ்வுப் பயணம் எதை நோக்கி சென்று கொண்டிருக்கின்றது என்று சிந்திக்கவும் அதே நேரத்தில் அந்தப் பயணத்தின் போது தனக்கும் கடவுளுக்கும் தனக்கும் அயலவருக்கும் உள்ள உறவை புதுப்பிக்கும் ஒரு புனிதமான காலமாகும்.

இது ஒரு ஆன்மீக தேடலின் காலமும் கூட ஏனெனில் நம்மை இறைவனிடம் இருந்து பிரிக்க முயற்சிப்பவர்களை கைவிட்டுவிட சந்தர்ப்பம் கிடைக்கின்றது. ஆண்டவர் இயேசு அனுபவித்த பாலைவன அனுபவத்தைப் போன்று எமது பலவீனங்களின் மத்தியிலும் சோதனைகளை எதிர் கொண்டாலும் அவற்றை வெற்றி கொள்ள இத்தவக்காலம் ஓர் நல்ல வாய்ப்பாகும்.

எனினும் பாலை வனம் போன்ற தவக்கால அனுபவத்தில் நாம் தனியாய் இல்லை. யேசு படிப்பினையின் படி தவக்காலத்தின் முக்கிய புண்ணியங்களாகிய செபம், ஒறுத்தல் பிறரன்பு, செயல்கள் ஆகியவற்றை கருத்தில் கொண்டு இந்த அருளின் காலத்தை நன்கு பயன்படுத்தி ஆண்டவரின் பாஸ்கா மறைபொருளில் பங்கேற்க அழைக்கப்படுகின்றோம். இயேசு இறுதி நாட்களில் ஜெருசலேம் பேராலயத்தில் வியாபாரிகளை ஆக்ரோசமாக விரட்டி அடித்து ஆலயத்தை சுத்தப்படுத்திய சம்பவம், அவரை முன் நிறுத்தி வாழ்த்திப் போற்றி கழுதை மீது அமர்த்தி ஜெருசலோம் நகரை நோக்கி சென்றனர். அதன் பின்னர் இயேசு தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டு யோர்தான் ஆற்றை விட்டுத் திரும்பினார். பின்னர் அவர் ஆவியால் பாலை நிலத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார். அவர் நாற்பது நாள் அலகையினால் சோதிக்கப்பட்டார் அந்நாட்களில் அவர் ஒன்றும் சாப்பிடவில்லை அதன் பின் அவர் பசியுற்றார். அலகை அவரிடம் "நீர் இறைமகன் என்றால் இந்தக் கல்லை அப்பமாக மாற்றும் படி கட்டளையிடும்" என றது. அதனிடம் யேசு மறுமொழியாக மனிதன் அப்பத்தினால் மட்டுமல்ல இறைவனிவாய்சொல் ஒவ்வொன்றாலும் வாழ்வான் என்று எழுதியுள்ளது என்றார்.

பின்னர் அலகை அவரை அழைதது சென்று உலகத்தின் அரசுகள் அனைத்தையும் ஒரு நொடிப் பொழுதில் அவருக்குக்காட்டி இவற்றின் மேல் முழு அதிகாரத்தையும் இவற்றின் மேன்மையையும் உமக்குக் கொடுப்பேன் நீர் என்னை வணங்கினால் அனைததும் உம்முடையவையாகும் என்றது. யேசு அதனிடம் மறு மொழியாக, உன் கடவுளாகிய ஆண்டவரை வணங்கி அவர் ஒருவருக்கே பணிசெய்வாயாக என்று மறை நூலில் எழுதியுள்ளது என்றார். பின்னர் அவரை யெருசலேமுக்கு அழைத்துச் சென்றது கோயிலின் உயர்ந்த பகுதியில் அவரை நிறுத்தி நீர் இறைமகன் என்றால் இங்கிருந்து கீழேகுதியும். உம்மைப் பாதுகாக்கும்படி கடவுள் தம் வான தூதர்களுக்கு உம்மைக்குறித்து கட்டளையிடுவார் என்றும். உம் கால் கல்லில் மேல் மோதாதபடி அவர்கள் தங்கள் கைகளால் உம்மை தாங்கிக் கொள்வார்கள் என்று. யேசு அதனிடம் மறு மொழியாக உன் கடவுளாகிய ஆண்டவரை சோதிக்கவேண்டம் என்றும் சொல்லியுள்ளதே என்றார் அலகை சோதனைகள் அனைத்தையும் முடித்த பின் ஏற்றகாலம் வரும் வரை அவரை விட்டு அகன்றது.

எஸ்.டிவின் மார்றல
யோசப்வாஸ் நகர்
தோட்டவெளி
மன்னார்.



பெயர்: ச.சிந்துஜன் யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரி.

## உயிர்ப்பு

ஒரு பிரளயத்தின் முடிவாக
புதிய சகாப்தத்தின் தொடக்கமாக
கால மாற்றத்தின் அடையாளமாக
வாழ்வின் அர்த்தமாக அமைகின்றது.

நெல் அழியாவிட்டால் முளைகட்டா
மண் மாற்றப்படா விட்டால் பாத்திரமாகா
தீ பொசிக்கா விட்டால் வேள்வியாகா
மனம் மாறாவிட்டால் உயிர்ப்பாகா

இ.திலகரட்ணம்

## 2011 O/L பரீட்சை முடிவுகள்

**பிரான்சிஸ்கன் சகோதரர்களால் வழிநடாத்தப்படும் இளவாலை சென். ஜோசப் விடுதி மாணவர்களின் 2011 ஆம் ஆண்டுக்கான சாதாரண தரப் பரீட்சையில் சித்தி பெற்றோர் விபரம்.**

அ. திலக்சன் 4 ஏ. பி. 3 எஸ்,
அ.கிரேக்கர் 3 ஏ, பி, சி, 3 எஸ்,
அ. கஜித் 2 ஏ. 2 பி. 2 சி. எஸ்,
பே.யூட்சன் 2 ஏ. பி. 2 சி. 2 எஸ்,
கு.விஜேந்திரா ஏ. 4 பி. 2 சி. எஸ்,
றோ.றொசாந்தன் ஏ.3 பி. சி. எஸ்,
யோ. தினேஸ் ஏ.பி. 5 சி. எஸ்,
செ.விதுஸ்ரன் ஏ.பி. 3 சி. எஸ்,
ஜே.ஜெயசீலன் ஏ.பி.2 சி. எஸ்,
ம.திவ்வியபிரசாத் ஏ. 3 சி. 2 எஸ்,
சி.சஜீவன் ஏ. சி. 2 எஸ்.
அ.சகாயநிக்சன் பி. 3 சி. 2 எஸ்,
ம. ஜக்சன் பி. 2 சி. 3 எஸ்.
செ.யூட்சிலோஜன் பி. 2 சி. 3 எஸ்,
க.லக்மன் ஜோய் 2 சி. 4 எஸ்,
ச.மிகுந்தன் 2 சி. 2 எஸ்.

## திருச்சிலுவைக் கன்னியர்களின் புதிய மாகாணக் குழுவினர்


அருட்சகோதரி விக்ரறின் ஜேம்ஸ் அவர்கள் திருச்சிலுவைக் கன்னியர் சபையின் புதிய மகாணத் தலை வியாகவும் அவரது ஆலோசகர்களாக அருட்சகோதரிகள் செலின் கோமஸ், றொபீனா பவுலின், பெனிற்றா பாக் கியநாதர், றஞ்சினி அந்தோனிப் பிளளை ஆகியோரும் தெரிவு செய்யப் பட்டுள்ளார்கள். இவர்கள் பங்குனி மாதம் 1 ஆம் திகதி தமது பொறுப்புக் களை ஏற்றுள்ளார்கள். புதிய மாகாணக் குழுவின் நற்பணிக்கு பாதை தமது வாழ்த்துக்களைத் தெரிவித்து நிற்கினறது.

கடந்த ஒன்பது வருடங்களாக இச் சபையின் மாகாணத் தலைவியாகப் பணியாற்றிய அருட்சகோதரி வைத்திய கலாநிதி இம்மாக்குளேற்றா அவர்கள் இச்சபையை சிறப்பாக வழிநடத்தினார். இக்குழுவுக்கு எமது பாராட்டுக்கள்.

**நண்பர்களுடன் அல்ல பகைவர்களுடனே சமாதானத்தை வெளிப்படுத்துங்கள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அசீசி யார்?



எழுநூறு அல்லது எண்ணூறு வருடங்களுக்கு முன் அசிசிப்பட்டினம் எப்படி இருந்ததோ இன்றும் அப்படியே தான் இருக்கிறது. போரையிட்டு எழுப்பப பட்ட அரண்கள் பாழடைந்து விட்டனவே ஒழிய, இயற்கை அமைப்பு இன்னும் மாறவில்லை. புழக்கமற்ற நெடும் வீதிகளில் இருமருங்கும் காட்சியளிக்கும் செங்குத்தான மலைச் சாரல்களில் புராதன இல்லங்களை இன்னும் நாம் காணலாம். சுபாசியோ மலையின் கெம்பீரக்காட்சி அதன் அடியில் பெறூஜியாவிலிருந்து ஸ்பொலேற்றோ போகும் வரையும் உள்ள உம்பிறியா 'பிரதேசம்' உயர்ந்த நெருங்கிய வீடுகள், இவையெல்லாம் இன்றும் அன்று போல் மனதைக் கவர்வன. இவற்றின் மத்தியில் தான் புனிதர் பிரான்சிஸ் பிறந்தார்.

இவர் பிறந்த வீடு இருந்த இடத்தில் ஒரு தேவாலயம் காட்சியளிக்கின்றது. என்றாலும் இவர் இளம் பராயம்வரை வசித்து வந்த தெருவின் தோற்றமும் எளிமையும் இன்றும் மாறவில்லை. இவர் 1182 இல் பிறந்தார் என்பதற்குக் கூடிய ஆதாரங்களுடன் இருக்கின்றன. புனித பிரான்சிசின் சீவிய வரலாறுதான் தக்க ஆதாரங்களுடன் முதன் முதலாகப் பூர்த்தியாக்கப்பட்ட ஒரு புனிதரின் வரலாறு என்று சரித்திர ஆராய்ச்சியாளர்கள் கணித்துள்ளார்கள்.

இவருடைய பெற்றோரைப்பற்றிய விபரங்கள் அதிகம் இல்லை. சில குறிப்புக்களை மாத்திரமே சரித்திர ஆராய்ச்சியாளர்கள் நமக்குத் தந்துள்ளார்கள். பிரான்சிசின் தந்தை பியேத்றோ பேர்ணடோணே ஐஸ்வரியம் பெற்ற ஒரு புடைவை வியாபாரி பணம் சேர்க்க வேண்டுமென்ற ஒரே நோக்கத்தோடு துணிவுடனும் நாணயத்துடனும் தன் சொந்தத் தேசத்தை விட்டுப் பிறதேசங்களில் வர்த்தகம் பண்ணியதால் அவர் பெரும் தனவந்தரானார். தான் ஈட்டிய செல்வத்தின் பயனாய்ப் பிரபுக்களுக்கு அளிக்கப்படும் மரியாதையையும், கௌரவத்தையும் அவர் பெற்று வந்தார். பிறதேசங்களில் வர்த்தகம் செய்வதில் தன் காலத்தின் பெரும்பகுதியைச் செலவழித்தார். பிறதேச வர்த்தகப் பிரயாணம் ஒரு வகையில் போருக்குச் செல்வதைப் போன்றது. வழிபறித் திருடர்கள் பயம் ஒரு புறம். மறுபுறம் பிரயாணத்தில் செலவாகும் நாட்களுக்கும், கொள்வனவு விற்பனவுகளில் செலவாகும் நாட்களுக்கும் ஒரு குறித்த வரையறை கிடையாது. சில பட்டினங்களில் சதாசந்தை கூடிய படியேயிருக்கும். இச் சந்தைகளில் கொள் முதல் செய்யவும், விற்பனவு செய்யவும் உலகத்தின் பலபாகங்களிலுமிருந்து வியாபாரிகள் வருவதும் போவதுமாக இருப்பார்கள்.

இப்படியாக வாணிபம் செய்பவர்களில் புடைவை வியாபாரிகளே அதிக பணம் சம்பாதித்தார்கள். ஒரு வகையில் இவ் வியாபாரிகள் தனித் தனி வங்கிகளாகவும் இயங்கி வந்தார்கள். இவர்கள் தங்கள் வியாபாரப் பொதிகளோடு, தங்கள் அரசர்கள் பேரால் வசூலிக்கப்பட்ட வரிப்பணத்தையும் மூட்டை முடிச்சுக்களாகக் கொண்டு செல்வார்கள். இப்படியான ஒரு வியாபாரி ஒரு மாளிகையில் அல்லது ஓர் அரண்மனையில் வந்து இறங்கி விட்டால், அங்குள்ள ஆர்ப்பாட்டத்திற்கு அளவே கிடையாது. துணிமணிகளை விலைபேசுவதும் வாங்குவதும் ஒருபுறமிருக்க, வியாபாரி கொண்டு வந்திருக்கும் ஊர்ப் புதினங்களையும், செய்திகளையும் அறிவதில் அங்குள்ளவர்களுடைய ஆவலுக்கு ஓர் எல்லையே கிடையாது. வியாபாரியாருக்கு வரவேற்பு உபசரணைகள் அமோகமாக நடக்கும். அத்தோடு அவருடைய பிரயாணத் திற்குத் தடை ஏற்பட்டு விடும். இவ்வித ஆதரவு கிடைக்கப்பெற்றவர்களான வியாபாரிகள், பிரபுக்களுக்கு அடுத்த படியில் மதிக்கப்பட்டு வந்தார்கள். இவ்வித மதிப்புக்குரியவர் தான் பியேத்றோ பேர்டோணே.

> **புனித பிரான்சிசின் வாழ்க்கையின் ஒவ்வோர் அம்சத்தையும் நாம் அவதானிக்கும்பொழுது வீரக்கவிகளின் நினைவும் நமக்கு வரும். ஒன்றில் அப்பாடகர்களின் கவிகளில் கூறப்பட்டது போல் இவர் செய்கைகளும் இருககும். அல்லது அவர்கள் பாடுவதைப் போல் பாவனை செய்து தாமும் பாடி ஆடுவார். கவிகளில் உள்ள சொற் றொடர்களைக் கேட்போரை வசீகரிக்கும் தன்மையில் கையாடுவார். இதுவே சிறப்பு.**

பியேத்றோ பேர்ணடோணே எப்பொழுது எங்கு மணமுடித்தார் என்பது திட்டமாகச் சரித்திரத்தில் கூறப்பட்டில்லை. இவர் பீக்கா என்ற மாதரிசியை மணந்து இரண்டு பிள்ளைகளையென்றாலும் பெற்றிருக்க வேண்டுமென்று சரித்திர வாயிலாக அறிகிறோம். பிரான்சிசுக்குப் பின் ஆஞ்ஜெலோ என்பவர் பிறந்தார் என்பது ஆராய்ச்சியாளர் முடிவு. பீக்கா ஒரு குணவதி, பிரான்சிசின் சரித்திர ஆசிரியர்களில் சிலர் இவளுக்கு ஒரு பிரபுக்கள் வம்சாவழியை அளிக்கின்றனர். ஆனால் நான் ஒரு சாதாரண குடும்பத்தில் பிறந்தேன் என்று பிரான்சிஸ் பகிரங்கமாகச் சொல்லும்பொழுது பீக்கா ஒரு பிரபு வம்சத்தவள் என்று நாம் எப்படிக் கருதலாம்? ஆயினும் பீக்காவின் குணாதிசயங்கள் பிரபுக்கள் வம்சத்தில் உதித்த ஒரு சீமாட்டிக்கு ஒத்தனவாயிருந்தன. நம் கதாநாயகரின் அரும் பெருங்குணங்கள் எல்லாம் அவருடைய அன்னையிடம் காணப்பட்டன.

பீக்கா தன் வீட்டுக் காரியங்களையும், வீட்டோடு சேர்ந்திருந்த வியாபாரத்தையும் கவனிக்க, பியேத்றோ பேர்ணடோணே வெளியூர்களில் வியாபார விஷயமாய் நெடும் பிரயாணங்கள் செய்வார். இவ்வித பிரயாணங்கள் ஒன்றின்போது தான் உலக சரித்திரத்தையே மாற்றி அமைக்கப்போகும் இரண்டாம் கிறிஸ்துவாக பிரான்சிஸ் என்பவர் அவர்களுக்குப் பிறந்தார்.

மாதரசி பீக்கா தன் கணவரின் வருகைக்குக் காத்திராமல், தன் தலைப் பிள்ளைக்கு அருளப்பர் என்ற நாமத்தோடு புனித றுபினோ தேவாலயத்தில் திருமுழுக்காட்சி வைத்தாள். இப்பெயர் எப்பொழுது, எப்படி மாற்றப்பட்டது என்று அறிவதற்கில்லை. பிரான்சிசை நேரடியாக அறிந்த செலானோ தோமையார் என்ற சீடர் இவர் தனது பரலோக பாதுகாவலரான ஸ்தாபக அருளப்பர் திருநாளை விசேஷ பயபக்தியுடன் கொண்டாடி வருவார் என்று எழுதி வைத்துள்ளார். பிரான்சிசுக்கு அருளப்பர் கிறிஸ்து நாதரின் முன்னோடியல்லவா? சுவி சேஷக அருளப்பர் கிறிஸ்துநாதரால் விசேஷமாக நேசிக்கப்பட்டவரல்லவா?

கிறிஸ்துநாதரை இதுவரையும் வேறு எவராவது கண்டுபாவியாத விதமாய், அவருடைய தரித்திரத்தையும், மறைந்த சீவியத்தையும் கண்டு பாவிக்கப்போகும் பிரான்சிசுக்கும் அருளப்பர் என்ற நாமம் எவ்வளவு பொருத்தமானது? பிரான்சிசைப்பற்றி இவருடைய துணைவர் மூவர் எழுதிய சரிததிரத்தில் பிரான்சு தேசத்தின் மேல் இவருடைய தந்தைக்கு இருந்த அமோகமான பிரியத்தினால் தன்மகனைப் பிரான் செஸ்கோ என அழைத்து வந்தார் என எழுதி வைத்திருக் கிறார்கள். பிறான் செஸ்கோ என்பது பிரான்சியச் சிறுவன் , என்று பொருள்படும். அக்காலத்து வணிகர்களுக்குப் பிரான்சிய மொழி அத்தியாவசியமாய் இருந்ததால் இவர் தந்தை இவருக்கு இம்மொழியில் பயிற்சி அளித்திருப்பார். இப்பட்டப் பெயரால்தான் நம் அருளப்பர் அன்று தொடக்கம் காலாகாலத்திற்கும் அறியப்படுவார். பிரானசிஸ் என்ற பெயரும் ஒரு வகையில் இவருக்குப் பொருத்தமானது. இவர் பிரான்சு மொழியைப் பேசுவதிலும் அந்நாட்டுப் பாடல்களையும், காவியங்களையும் மனமுருகப் பாடுவதிலும் தனி இன்பம் கொண்டவர்.



பிரான்சிஸ் உலக ஞானத்தையோ, அல்லது ஆத்ம ஞானத்தையோ பிறரிடமிருந்து படித்ததாக ஏடுகளில் காண்பதிற்கில்லை. இவருடைய வீட்டுக்கருகாமையில் புனித ஜொர்ஸ் பெயரால் ஒரு கோவிலும், அதையடுத்து ஒரு கனிஷ்ட பாடசாலையும் இருந்தன. அந்தப் பாடசாலையை நடத்திவந்த சந்நியாசிகளிடமிருந்து இலத்தீன் மொழியை எழுதவும், வாசிக்கவுமே கற்றுக் கொண்டார். எழுதுவதில் இவர் அவ்வளவாகத் தேர்ச்சி பெறவில்லை. இவரால் எழுதப்பட்ட கைப்பிரதிகள் மிகவும் சொற்பம். நமக்குக் காணக்கூடியதாயிருக்கும் சில கைப்பிரதிகளில். எழுத்துக்களின் அமைப்பு மிகவும் சர்வ சாதாரணமானது. இவர் அதிகம் எழுதியவரல்லர். எழுதவேண்டியவற்றை இவர் தனது சீடர் சகோதரர் லீயோவுக்குச் சொல்ல அவர் எழுதுவார். (தௌ) என்ற எபிரேய அட்சரம் தான் இவரது கையொப்பம். மேற்கூறிய அறிவோடு சிறுவர்களுக்கான வேத அறிவையும் இவர் பெற்றிருப்பார். இவற்றிற்கு மேலதிகமானவற்றைத் தேவனே இவருக்குக் கற்பித்து வைத்தார்.

இவரின் இயல்பான நுண்ணறிவு இவருக்கு அநேக உலக காரியங்களை அறிந்து கொள்ள உதவியாயிருந்தது. இவர் அதிகமான நன்மைகளைப் பெற்ற பாடசாலை வீரக்கவிகள் தான். வீரக்கவிகளைப் பாடுவது தான் அக்காலத்து நாகரிக மாயிருந்தது. நாடோடிப் பாடகர்கள் ஊர் ஊராய்ச் சுற்றித்திரிந்து தங்கள் நாட்டு வீரர்களையோ, அல்லது பிறநாட்டு வீரர்களையோ புகழ்ந்து பாடுவது அக்காலத்தில் சர்வசாதாரணம். அரண்மனைகளிலும், மாளிகைகளிலும் இவர்களுக்குப் பெரும் வரவேற்பும், மரியாதைகளும் கிடைக்கும். காதற் சித்திரங்களும், பெண் அழகிகளின் வர்ணனைகளும் இவர்களுடைய கவிகளில் முக்கிய இடம் பெறும். எப்படி இலை இன்றி மரமில்லையோ அல்லது மீனினங்களின்றி விண் இல்லையோ அவ்வண்ணமே ஒரு வீரனின் தீரச் செயல்களைப் பாட வேண்டுமென்றால் அதில் ஒரு காதல் நாயகிக்கும் இடம் இருக்கும். இந் நாடோடிப் பாடகர்கள் தலை காட்டாத இடம் இருக்காது. புண்ணியதலங்கள். பட்டினத்துச் சந்தைகள். எங்குண்டோ அவர்கள் அங்கிருப்பார்கள். தத்தமக்குச் சொந்தமான பாணியில் ஓரிடத்தில் பாடி, கேட்போரை அலுக்க வைத்த கவிகளையே இன்னோரிடத்திலும் பாடித்திரிவார்கள்.

புனித பிரான்சிசின் வாழ்க்கையின் ஒவ்வோர் அம்சத்தையும் நாம் அவதானிக்கும்பொழுது வீரக்கவிகளின் நினைவும் நமக்கு வரும். ஒன்றில் அப் பாடகர்களின் கவிகளில் கூறப்பட்டது போல் இவர் செய்கைகளும் இருக்கும். அல்லது அவர்கள் பாடுவதைப் போல் பாவனை செய்து தாமும் பாடி ஆடுவார். கவிகளில் உள்ள சொற் றொடர்களைக் கேட்போரை வசீகரிக்கும் தன்மையில் கையாளுவார். இதனைக் கேட்பதற்குச் சனங்கள் திரள் திரளாகக் கூடுவார்கள்.

பேர்ணடோனோ என்பவரின் மூத்த மகன் வளர்க்கப்பட்ட முறை உசிதமானதாய் இருந்திருக்காது. அக்காலத்தில் கிறிஸ்தவப் பெற்றோர்கள் கூடத் தங்கள் பிள்ளைகளைச் செல்வத்திலும், மேனமையிலும் வளர்த்து வந்தார்கள். பாலகர்கள் மழலையில் பேசும்பொழுதே வெட்கத்துக்குரிய தகாத செயல்களைச் செய்யவும், பேசவும் கற்றுக் கொடுக்கப்பட்டார்கள். பால் மணம் மறக்கு முன்பே தூஷண வார்த்தைகள் பேசவும் வற்புறுத்தப்பட்டார்கள். அப்படிச் செய்யாவிடில் சிறுவர்கள் துன்புறுத்தப்பட்டார்கள். பிள்ளைகள் எவ்வளவுக்கு ஒழுக்கம் கெட்டார்களோ, அவ்வளவுக்கு அவர்களுடைய பெற்றோர் மகிழ்வுற்றார்கள். இச் சிறார்கள் வளர்ந்ததும் தாங்களாகவே தீயவழிகளை நாடி, மேலும் மேலும் கொடுஞ்செயல்களைப் புரியும் பழக்கத்திற்கு உள்ளாவார்கள். என்று செலானோ தோமையார் எழுதியிருக்கிறார். இவ்வர்ணனை ஒரு வகையில் மிகைப்படத்தப்பட்டதாயிருக்கவும் கூடும்.

ஆனால், புனித பொனவெந்தூரின் பட்சபாதமற்ற கணிசத்தில், பிரான்சிஸ் தற்பெருமை கொண்டவர்கள் மத்தியில் தற்பெருமை கொள்ளும்படியாக வளர்க்கப்பட்டார். இது, இவர் பழக்க வழக்கத்தில் நன்றாக வளர்க்கப்படவில்லை என்பதை எடுத்துக்காட்டுகின்றது இவருடைய தந்தையை ஒரு கெட்ட மனிதனாகக் காண்பதற்கில்லை.

*(தொடரும்...)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைஞனே உன் அடையாளம் என்ன?

படைப்பின் சிறப்பில் மிக முக்கிய மானது மனிதனை இறைவன் தன் சாயலாகப் படைத்தார் என்பதனை உணரும் பக்குவம் தான் ஆன்மீகத் தேடலின் விடையாக மிளிரும். சமூகமாக வளரும் நிலையில் சமூக மாற்றங்கள், தேடல்கள் நன்னெறி சமூகத்தை ஆன்மீக விழுமியங்களைக் கொண்டே நிர்ணயிக்கப்படுகின்றன.

நன்னெறி சமூகம் மலர மனித சமுதாயத்தில் வழிகாட்டல்கள் பலவான போதும் அதனை உய்த்துணர்ந்து கடைப்பிடிப்பதில் நடைமுறைப்படுத்துவதில் போதனைகளாலும், மதங்களாலும், குடும்ப முன் மாதிரிகளாலும் முன்னெடுக்கப்பட்டாலும் கணிப்பிட்டு சிறந்த சமூகம் யார் என்பதனை நிர்ணயிப்பது சிறந்த குடும்பச் சூழலுள்ள இளைய தலைமுறையினரது செயல்களே வெளிப் பாடாக மிளிரும்.

சமூக மாற்றத்தின் முன்மாதிரிகளான இளையோர் மட்டில் அதிக எதிர்பார்ப்புக்கள் இன்றைய காலத்திலும் எதிர்பார்க்கப்படுகிறது. ஏன் என்றால் "இன்றைய இளையோர் நாளைய தலைவர்கள்" என்ற முதுமொழி பொய்த்து போய் 'இன்றைய தலைவர்கள் இன்றைய இளைஞர்கள்' என்பதனை உள்ளூர்களிலும், உலக அரங்கிலும் மாறிவரும் இளையோரின் செயல் வடிவங்களே காரணமாகும்.

இளையோரின் செயல்கள் திடீரென தோன்றி விடுவதில்லை. அவர்கள் வாழும் சூழல், வளர்ந்து வர முன்நின்றவரின் முன்மாதிரிகள், வழிகாட்டிகள், குடும்ப சூழல், இன்றைய நவீன செய்தி தொடர்பூடக செல்வாக்குகளே இளையோர்களின் உருவாக்கத்தில் அதிக செல்வாக்குச் செலுத்தவல்லன. அதனால்



"வீண் பெருமைகளைத் தேடாமலும், ஒருவருக்கொருவர் எரிச்சல் ஊட்டாமலும் ஒருவர் மீது ஒருவர் பொறாமைப்படாமலும் இருப்போம்" என்ற கலாத்தியர் திருமுக வாக்கை வழிநடாத்த உழைப்போமா?

## மாற்றத்துக்கான வழி

இளைய தலைமுறையினர் தம்மைத் தாமே மீட்டுப் பார்க்க, எமது சமுதாய மாற்றத்தின் பங்காளராவதில் ஈடுபட கிடைத்த சந்தர்ப்பங்களைத் தேடுவோமெனில் 'மதிப்பிற்குரிய இனம் எது? மனித இனம், மதிப்பிற்குரிய இனம் எது? ஆண்டவருக்கு அஞ்சுமினம் என் றும் இளமை முதல் நற்பயிற் சியை தேர்ந்துகொள், முதுமை யிலும் ஞானம் பெறுவாய், உழுது விதைத்து பின் நல் விளைச்சலுக்காகக் காத்திருக்கும் உழவர் போன்று ஞானத்தை அணுகு' எனச் சீராக் ஆகமம் கூறுகிறது. இவை இளையோர் வாழ் விற்கு என்றும் பொருத்த மானதே.

- செயோன் -

சமூகத்தில் இளையோர் செல்வாக்கு அதிகரித்திருப் பதை முதலில் இளையோர் உணரும் நிலையை உருவாக் கும் சந்தர்ப்பங்களில் தன் நம்பிக்கையும், ஆளுமை விருத்தியும், ஆன்மீக விழுமியங்க ளும், சமூகப் பொறுப்பும் வள ரும் சந்தர்ப்பங்களே நன்நெறி சமுதாயத் தலைவர்களாக சமுதாய மாற்றத்தை ஏற்படுத்தும் இளையோராய் மிளிர வாய்ப்புண்டு.

இளையோரே "நன்மை செய்வதில் மனம் தளராது இருப்போமாக. நாம் தளர்ச்சி அடையாதிருந்தால் தக்க காலத்தில் அறுவடை செய்வோம் ஆகையால் காலம் இன்னும் இருக்கும் போதே எல்லோருக்கும் சிறப்பாக, நம்பிக்கை கொண்டோரின் குடும்பத்தினருக்கும் நன்மை செய்ய முன் வருவோம்" என கலாத்தியர் திருமுகம் கூறும் வார்த்தையை வாழ்வாக்குவோம்.

இன்றைய இளையோர்களின் பொழுதுபோக்கு, சமூகப் பொறுப்பு, ஆன்மீக விழுமியங்கள் பற்றிய தெளிவு குடும்பத்திலும், பொது இடங்களிலும் கொடுக்கத் தவறியதும், சூழலை உருவாக்காமையும் இறையியல் அனுபவங்கள் அருகி வருதல், கலாசார, ஆன்மீக பண்பாடு விழுமியங்கள் சிதைவடையக் காரணமாவதை பலராலும் சுட்டிக்காட்டப்படுவது ஒருபுறம் மிகைப்படுத்தப்பட்ட இளையோர் மீது குற்றச் சாட்டுக்கள், பிரசாரப்படுத்தப் படுவதில் ஊடகங்களின் பங்களிப்புகளும் அதிகமாகி வருவதை அவதானிக்க முடிகிறது.

## யார் இந்த இளையோர்?

அவர்களின் பிறப்பில் பெயர் வைத்ததில் இருந்து ஆன்மீக நன்னெறி பழகக வழக்கங்கள் வரை ஊட்ட வேண்டிய பருவம் விபரமறியாத சூழலில், குடும்ப மும் போதனையூட்டும் சமயங்களும் தமது விதைப்பை மீள்பார்வை செய்ய வேண்டியதும் காலத்தின் தேவையாக வுள்ளது.

அறிவு விருத்திக்கான காலப்பகுதியில் முதல் நன்மை, உறுதிப்பூசுதல், மறைக்கல்வி, திருமண முன் ஆயத்த முறைமைகள் பரீட்சைக்குத் தயாராகும் முன்னாயத்தமாக மட்டும் உருவாக்கப் படுதல் மூலமும், ஆர்வக் குறைவாய் இருப்பதும் காரணமாகலாம்.

இருளைப் பழிப்பதைவிட ஒளி ஏற்றும் வகையில் இளையோரின் திறமைகள் சிறப்புக்கள், ஆர்வங்களை ஊக்கமூட்டவும் அதனை வெளிப்படுத்தும் சந்தர்ப்பங்களை ஏற்படுத்தி ஆற்றல் திறன்களை நன்நெறிச் சமூகம் மலர பொறுப்புக்களை இளையோரிடத்தே அளித்து, அறுவடைகளை சமூகம் அனுபவிக்க வாய்ப்பாக்கலாம்.

இளமைகளின் குறும்புத்தனம், தவறுகள் கூட அதிகமாகத் தெரியலாம். அவர்கள் சமூகத்தை வழிநடாத்த வேண்டியவர்கள் என்பதனை உணர்ந்தவர்கள். குறைகளைக் கூறியே இளையோரை குட்டிச் சுவராக்காது குறைகள் உள்ளவர்களிடத்தில் உள்ள நிறைகளைப் பாராட்டி ஊக்கப்படுத்துவதால், நிறைகளை வளர்ப்பதுடன் குறைகளை தவிர்க்கவும், நல்னெறிச் சமூகத்தின் பங்காளராக இன்றைய இளையோரைப் பொறுப்புள்ளோராக உருவாக்கவும் வாய்ப்பு ஏற்படுத்தலாம்.

எமது சூழலில் இளையோரை அணுகுவதில் சமநிலை உறவுகள், கலந்துரையாடல்கள், இளையோரின் இலக்குகள் அடையாளங்கள் நல்நெறிச் சமூகத்தின் வெளிப்பாடாக விழித்து எழும் பொறுப்பு, சமூக மாற்றத்தின் முக்கிய பங்காளர் பொறுப்பாளரே. எமது நாட்டு இளையோர் எமது சமூகத்தின் அடையாளங்களாவார்கள் என்பதை சொல்லால் அல்ல செயலால் காண்போம்.

முன்மாதிரிகள் வழிகாட்டிகளானால் அவர்ளின் உருவாக்கம் சமூகப் பணிகளில சுமைதூக்கும் மாதிரிகளை உருவாககாமல், முன்நின்று முன்னேற்றமடைய பொறுப்புக்களை ஏற்கும் சிறந்த தலைவர்களாவர்.

நல்ல தலைவர்கள் வழிகாட்டிகளால் அறிமுகப்படுத்தப்படும் ஒவ்வொரு செயலும் இளையோருக்கு நம்பிக்கை பிறக்கும இளையோரின் வளர்ச்சியைக் கண்டு பாராட்டும் மகிழ்வுறும் சந்தர்ப்பங்களும் இளையோரின் செயலால் தம் அடையாளங்களை வெளிப்படுத்துவதை சமூக மாற்றங்களில் காணமுடியும்.

இளைஞனே உன் சிறப்பை வெளிப்படுத்த இதுவே தருணம். இன்று செய்ய வேண்டியதை நாளை எனத் தள்ளிப் போடாதே. எது நல்லதோ எது சமூகத்துககும் உனக்கும் பயனுள்ளதோ அதனை ஆன்மீக விழுமியங்கள் மிளிரவும் உன்னிடம் சமூகம் எதிர்பார்க்கும் சிறப்பை வெளிப்படுத்தி உன் பொறுப்பை வெளிப்படுத்து இதுவே உன் அடையாளமாகட்டும்.

இளைஞனே!
உனக்கோர் அழைப்பு!
துன்புறும் மக்களின் துயர் களைய, அறிவியல், தொழில்நுட்பம், ஆன்மீக வழியில் வலுவற்றோரை வலுவுள்ளோராக்க உன்னை அர்ப்பணிக்கத் தயாரா? அசீசியின் பாதையில் நீர் ஓர் அருட்சகோதாராக இணைந்துகொள்ள வாரும்!
O/L - A/L கற்றோகள் பங்குத் தந்தையர்கள் அனுமதியுடன் விண்ணப்பிக்கவும். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
மாகாணத் தலைவர்,
புனித பிரான்சிஸ்கன் சகோதரர் சபை,
கொன்வென்ட் வீதி, ஏக்கலை.

படித்ததில் சுவைத்தது...

## "சந்தேகம்"

தினம் தினம் திருப்பலியில் பங்கேற்று வந்த இளம் குருவுக்கு தனது வழிபாட்டில் மனக்குழப்பம் ஏற்பட்டது. எப்படி திருப்பலியால் நற்கருணை திரு உடலாக மாறும் என குழம்பியவராய் எதையும் நேரடியாக கூறி தெளிவு காணும் குணம்கொண்ட குரு அதைத் தீர்தது வைக்கவேண்டும். ஆரிடம் சென்று தனது சந்தேகத்திற்கு விடை தேடினார்.

*'எனக்கொரு சந்தேகம் ஆண்டகை அவர்களே, என குரு கேட்டார்?*

என்ன சந்தேகம் எதுவானாலும் கேளும் அதுவே நல்லது தனக்குள் குளம்பிக் கொள்வதை விட கேட்டு தெரிந்து கொள்ளலாம் என்றார் ஆயர்.

திருப்பலியில் எப்படி நற்கருணை யேசுவின் திருவுடலாக மாறும் என்ற குளப்பம் எனது வழிபாட்டை தூய்மையாக செய்து வைக்க முடிவதில்லை.

சில மறை உண்மைகள் விசுவாசத்திலும், நம்பிக்கையாலும் தான் உணரமுடியும். இதை ஒரு குருவாக வர படித்து பணி செய்யும் உமக்கே ஏற்பட்டால் சாதாரண மக்கள் எப்படி விளங்கிக்கொள்வார்கள். இவை பற்றி விளக்கங்கள் மேலும் பெற மீண்டும் என்னை சந்திக்க வாரும் என அனுப்பிவைத்தார்.

குருவின் சந்தேகம் தீரவில்லை நத்தார் திருப்பலிக்கு ஆயத்தம் செய்து பல்லாயிரம் மக்கள் மத்தியில் திருப்பலி நிறைவேற்றி நற்கருணையை உயர்த்தி இது கிறிஸ்துவின் உடல் என உரைத்தார். எல்லோரும் வணங்கி தலை குனிந்தனர். சிறுமி ஒன்று தாயின் மடியிலிருந்து சத்தமாக கத்தியது. யேசு பாப்பா, யேசு பாப்பா, பாருங்கள் அம்மா யேசு பாப்பாவை என்று சுட்டி காட்டியது.

தாயாரோ சத்தம் போடாதையும் கையினை கூப்பி வணங்கும் என்றார்.

அம்மா, அம்மா யேசுபாப்பா கை காட்டி துள்ளுவதை பாருங்கம்மா என்றதும் குடும்பத்தினருடன் ஆலயத்தில் அருகில் இருந்தவர்களும் பிள்ளையின் பார்வையும் குதூகலிப்பும் திசைதிருப்பியது. திருப்பலி முடிந்ததும் அந்த சிறுமி தான் கண்டவற்றை தன் அம்மா அப்பா சகோதரர்களுக்கும் சொல்லி மகிழ்ந்தது.

நத்தார் பூசை என்பதனால் மீண்டும் இரண்டு பூசை நடைபெறவிருந்ததால் அடுத்த பூசையிலும் கலந்து கொள்ள அக்குடும்பம் தீர்மானித்து திருப்பலியில் கலந்து கொண்டனர். அதே நற்கருணை எழுந்த நேரம் சிறுமி தன் தாயாரின் மடியிலிருந்து அதோ இயேசுபாப்பா, இயேசுபாப்பா, பாருங்கம்மா பாருங்க என சத்தமுடன் கை காட்டி கத்தியது. அந்த நற்கருணையை நேரே காட்டியதை ஏனையவரும் பார்த்தனர். திருப்பலி முடிந்தும் அந்த குரு வானவர் வந்து என்ன சத்தம் போட்டிர் என கூறியதற்கு அந்த குடும்பத்தினர் நடந்ததை விபரித்தனர்.

அது எப்படி நீங்களும் கண்டீர்களா என குரு கேட்டார். நாங்கள் காணவிலலை எங்கள் குழந்தை தான் இரண்டு திருப்பலியிலும் நற்கருணை உயர்த்தும் நேரத்தில் காட்டி மகிழ்கிறாள் என்றனர். பிள்ளையும் அதனை ஆமோதிப்பதாய் இயேசு பாப்பா நல்ல வடிவானவர் எனக்கு கையசைத்து காட்டினார் என அக்காட்சியை கூறியதை கேட்ட குருவோ மூன்றாம் பூசையிலும் நின்று பார்க்கும் படி கூறினார்.

அதே காட்சி அத்திருப்பலியிலும் அச்சிறுமி கண்டு சத்தமிட்டு அதோ இயேசுபாப்பா பாருங்க பாருங்க என கைய சைத்து மகிழ்ந்தது. இதைக்கண்ட குருவும் குடும்பத்தாரும் இயேசுபாலனின் காட்சியை கண்ட சிறுமியின் மகிழ்வை தாம் அனுபவிக்க முடியவில்லையோ என ஏக்கமுடன் தேட குருவின் சந்தேகமும் தீர்ந்தது குழந்தையின் செயலால் மாற்றம் பெற்றது.

ஆசிரியர் - அடைக்கலம்



பெயர்: F.X.வினுஷன்
சென்.பற்றிக்ஸ் கல்லூரி

உன் விசுவாசமே உன்னை இரட்சிக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்க கலை இலக்கிய வட்ட போட்டி முடிவுகள்

தாழ்ச்சியின் மாதிரியாக... கருப்பொருளில் தவக்கால கவிதை, கட்டுரை, ஓவியப்போட்டி முடிவுகள்.

**கவிதைப் போட்டி**

1 ஆம் இடம் யே.சிபோறினி யாழ். பண்டத்தரிப்பு ஜசிந்தா றோ.க.த.க. பாடசாலை. 2 ஆம் இடம் யூ.றொசானி - கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம். 3 ஆம் இடம் குணசேகரன் சக்தீனா - வேரவில், பூநகரி, கிளிநொச்சி.

பாராட்டுப் பெறுபவர்கள்

அருட்சகோதரி. சவியானா கில்டா - உள்ளக பயிற்சி ஆசிரியை யாழ். மானிப்பாய் றோ.க.த.க. பாடசாலை. ம.ஜெயறூபி - சென் ஆன்ஸ் றோ.க.த.க பாடசாலை மானிப்பாய. பா. பாலாஜினி - பண்டத்தரிப்பு ஜசிந்தா றோ.க.த.க. பாடசாலை. செ.மேரி துளசிகா - இளவாலை திரு.க.மடம் நீ மேரி கிறிஸ்ரின் - ஊர்காவற்துறை ப்ங்கு. பா. சிந்தியா - பண்டத்தரிப்பு ஜசிந்தா றோ.க.த.க.பாடசாலை. யே. டிலைக்சனா - யாழ். இளவாலை கன்னியர் மடம்.

**கட்டுரைப் போட்டி**

பிரிவு - 1

1 ஆம் இடம் அ.சபிட்சனா - பண்டத்தரிப்பு ஜசிந்தா றோ.க.த.க பாடசாலை. 2 ஆம் இடம் திவாசினி தருமராசா - யாழ். தொல்புரம் விக்கினேஸ்வரா வித்தியாலயம். 3 ஆம் இடம் இ.பிராங்கிளின் யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி.

பாராட்டுப் பெறுபவர்

ஜெ.ராகவர்த்தனி - திருக்குடும்ப கன்னியர்மடம், இளவாலை. ப.இமாக்குலற் யூலியா - பண்டத்தரிப்பு ஜசிந்தா றோ.க.த.க.பாடசாலை. ம.அபினித் ஜதுசன் - புனித அந்தோனியார் கல்லூரி, ஊர்காவற்துறை. ச.பிறின்சியா - திருக்குடும்பக் கன்னியர்மடம், இளவாலை. அ.அனற் சாருகா - பண்டத்தரிப்பு ஜசிந்தா றோ.க.த.க. பாடசாலை. செல்வரட்ணம் மதிவதனி - திருக்குடும்ப கன்னியர்மடம், இளவாலை. அ.மேரி றொக்சியா - சென்.ஆன்ஸ் றோ.க.த.க பாடசாலை, மன்ப்பாய். அ.சுதர்சன் - சென் அன்ரனீஸ் பாடசாலை, சாட்டி. தவராசா ஜெனனி - இளவாலை திருக்குடும்ப கன்னியர்மடம். நீ.லக்சனா யாழ். பண்டத்தரிப்பு ஜசிந்தா றோ.க.த.க. பாடசாலை.

**கட்டுரைப் போட்டி**

பிரிவு - 2

1 ஆம் இடம் றெ.வினுஜா - திருக்குடும்ப கன்னியர் மடம், இளவாலை. 2 ஆம் இடம் அ.றெஜிக்கா குணசீலி ஊர்காவற்துறை புனித மரியாள் மகளிர் வித்தியாலயம், 3 ஆம் இடம் ச.தாட்சாயினி பண்டத்தரிப்பு, ஜசிந்தா றோ.க.த.பாடசாலை.

பாராட்டுப் பெறுபவர்

வி.ம.றொஜிவன் - புனித அந்தோனியார் கல்லூரி, ஊர்காவற்துறை. டா.மிதுர்ஷன் - சென் ஹென்றி அரசர் கல்லூரி, இளவாலை. யோண்சன் வினோஜினி யா.சென். ஜேம்ஸ் மகளிர் பாடசாலை. சி.லங்ஜெயரூபிகா - பண்டத்தரிப்பு ஜசிந்தா றோ.க.த.பாடசாலை. குயின்டஸ் லூயிசா டினிசா - புனித சவேரியார் பெண்கள் பாடசாலை, மன்னார். செங்கதிர்ச்செல்வன் சேந்தன் - யாழ். இந்துக் கல்லூரி. தி.மரின் விஜினா - பண்டத்தரிப்பு ஜசிந்தா றோ.க.த.க.பாடசாலை. அ.றொசிந் - சென் ஆன்ஸ் றோ.க.த.க.ம வித்தியாலயம், மானிப்பாய். அ.கஜந்தினி - பண்டத்தரிப்பு ஜசிந்தா றோ.க.த.க.வித்தியாலயம், பா.பாலாஜினி - பண்டத்தரிப்பு றோ.க.த.க. பாடசாலை.

**ஓவியப் போட்டி**

பிரிவு - 1

1 ஆம் இடம் எஸ். சிந்துஜன் - சென்பற்றிக்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம். 2 ஆம் இடம் ஜெறாட் அந்தோனிப்பிள்ளை சஜீனன் - புனித ஹென்றி அரசர் கல்லூரி. 3 ஆம் இடம் சி. துஷாந்தன் - யாழ். பண்டததரிப்பு ஜசிந்தா றோ.க.த.க. பாடசாலை.

**பாராட்டுப் பெறுபவர்**

அ.நிலோசன் குரூஸ் - யாழ். திருமறைக் கலாமன்றம். செல்வி கி.அருள்மேரி - ஊர்காவற்துறை புனித மரியாள் மகா வித்தியாலயம். ஏ.ஜெயகாந்த் - பண்டத்தரிப்பு ஜசிந்தா றோ.க.த.க. பாடசாலை. ர.மரிய றொபின்சன் - நெடுந்தீவு மகா வித்தியாலயம். தே.நிதுசன் - புனித அந்தோனியார் கல்லூரி. ஊர்காவற்துறை. அ.அகிசயன் - திருமறைக்கலா மன்றம். அ.ஜெனி'.பர் - புனித அந்தோனியார் கல்லூரி. ஜே.அஜின் - நெடுந்தீவு மகா வித்தியாலயம். ம.டிசிலா - நெடுந்தீவு மகா வித்தியாலயம். கீ.பாரத் - திருமறைக் கலாமன்றம்.

ஓவியப் போட்டி

பிரிவு - 2

1 ஆம் இடம் எப்.எக்.வினுஷன் - சென். பற்றிக்ஸ் கல்லூரி. 2 ஆம் இடம் றெ.யோண் பற்றிக் - பண்டத்தரிப்பு ஜசிந்தா றோ.க.த.க. பாடசாலை, 3 ஆம் இடம் யே. லிமோஜன் - திருமறைக் கலாமன்றம்.

**பாராட்டுப் பெறுபவர்**

சு.சுதர்சன் - இளவாலை சென். ஹென்றி அரசர் கல்லூரி, நா.நிதர்சினி - சென். ஆன்ஸ் றோமன் கத்தோலிக்க பாடசாலை மானிப்பாய். தே. ஜெனோவா - புனித மரியாள் ஆலய பங்கு, ஊர்காவற்துறை. றொ.சுசிரேகா - இளவாலை தி.கு.கன்னியர்மடம். பி.யசின் பெல்சியா - சென் ஆன்ஸ் றோ.க.த.க ம. வித்தியாலயம். நை.பிரதீபா - புனித மரியாள் மகளிர் வித்தியாலயம், ஊர்காவற்துறை. யே்.மிதுலா - திருமறைக் கலாமன்றம். த.மேரி ஜோண்சி - புனித மரியாள் மகளிர் வித்தியர்லயம், ஊர்காவற்துறை. சர்மிலன் - இளவாலை, சென்.ஹென்றிஸ் கல்லூரி.

## சத்திரத்தில் இடமில்லை...

சத்திரத்தில் இடமில்லை (மோட்சம்)
வெளியில்மட்டும் வோஷம் போடுகிறாய்
வெள்ளையாக வேஷம்போடுகிறாய் - அதனால்
சத்திரத்தில் இடமில்லை - உனக்கு (சத்திரத்தில்)

கற்பனைகள் அனைத்தும்
கரைத்துக் குடித்து விட்டாய்
கண்ட பயன் யாதும் இல்லை
கண், கால் போன போக்கில்வாழும் - உனக்கு (சத்திரத்தில்)

ஆண்டவன் நான் ஒருவனே - அறிந்தும்
அவனியெல்லாம் ஓடுகிறாய்
ஆறுதல் தேடுகிறாய் - அந்தோ
ஆனதோ ஒன்றுமில்லை எனவே - உனக்கு (சத்திரத்தில்)

தாயும் தந்தையும் வணங்கி
தரணியில் பணிந்து - அவர்களில்
என்னைக் கண்டுகொள்வாய் என்றேன்
எனை மறந்து அவர்மறந்து வாழும் - உனக்கு (சத்திரத்தில்)

கொலை செய்யாதே என்றேன் - ஆனால்
அயலவன் உள்ளத்தை வார்த்தைகளால்
அவதூறு செய்து உண்மையை மறைத்து
அயலவனை அன்பு செய்யாது வாழும் - உனக்கு (சத்திரத்தில்)

அயலவன் பொருளுக்கு ஆசை
அவன் உடமையை அபகரிக்க ஆசை
ஆசாபாசங்களுக்கு அடிமையாகி
ஆளும் கற்பனையை மீறிவாழும் -உனக்கு (சத்திரத்தில்)

அர்ப்பணவாழ்வே கிறிஸ்தவம் - ஆனால்
அனைத்தையும் நீயே அபகரிக்க
அல்லும் பகலும் அலைகிறாய் -உனது
அடுப்பு மட்டும் எரிந்தால் போதுமென்று - எனவே (சத்திரத்தில)

ம.ஜெர்மன் - பெருகா

## சமாதானம் எம்மோடு வாழ

உங்களுக்கு சமாதானம் என்றார் யேசு
உள்ளவன் இல்லாதவனிடம்
உளமார நட்புடன் - நிறைவாய்
உள்ளதைப் பகிர்ந்து கொண்டு
உள்ளத்தில் நானை உதறித்தள்ளிவிட்டு
உன் அயலவனையும் அணைத்துகொண்டு
உலகில் ஏற்றத்தாழ்வுகள் இல்லை எனும் நிலை
உலகில் தோன்றும் நாளில் - கிட்டும்
உங்களுக்கு சமாதானம்.

பாவ இருளைப் போக்க வந்தார் யேசு
பாமரர் தம் அறியாமை இருளை நீக்க
பட்டி தொட்டி எங்கும் போதித்தார்
ஏழைகள் இல்லாத நிலை வேண்டும் - இங்கு
எல்லோருக்கும் எல்லாம் சமம் - என்று
இல்லாமை இல்லா நிலை வேண்டும் - இங்கு
எல்லோருக்கும் எல்லாம் சமம் - என்று
இல்லாமை இல்லை நிலை வேண்டும்
பசித்தவர்க்கு உணவும், நீரும்
பகிர்ந்திடச் சொன்னார் அதேவேளை - வீடின்றி
பரிதவிக்கும் மக்களுக்கு -முடியுமானால்
படுத்துறங்க இடம் கொடுங்கள் என்றார்
ஆடை இல்லாதவர்க்கு உன்னிடம் உள்ளதில்
ஆனமட்டும் உதவிடவேண்டும் என்றார்.
அளவுடன் ஆசை அவனியோர்க்குவேண்டும்
அடாவடித்தனங்கள் அனைத்திற்கும் - அடிப்படை
ஆசையே - பேராசையே - அதனால் முதலில் - அதனை
அகற்றி விட்டுக் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு
அத்துடன் உண்மை, உழைப்பு, நேர்மை இருந்தால்
அன்பு, சமாதானம் அணிவகுத்து
அவர் அரசு வந்து விடும் அவனியில்
அவர் சித்தம் நிறைவேறிவிடும். - அனுதினமும்
அவர் அளித்த சமாதானம் எங்கும் கொலுவிருக்கும்.

ஏ.சில்வியாமேரி
புளியாவத்தை



## அருட்பணி பி.பி.பிலிப் அ.ம.தி
## குருத்துவப் பொன்விழா
## வாழ்த்துக்கள்

29
.
04
.
2012

குருத்துவத்தின் தனித்துவம் காத்து
அமதி தோட்டத்தில் அருட்பணியாளராய்
ஐம்பதாண்டு காணும் பெருந்துறவி
அருட்பணி பி.பி.பிலிப் அடிகளாரின்
குருத்துவப் பொன்விழா சிறக்க
இறை ஆசீர்வேண்டி வாழ்த்துகிறோம்.


## திருச்சபையில் இணையும் இரு குருமணிகள்





யாழ். பேராலயத்தில் மே 24 ஆம் திகதி யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையால் திருப்பொளிவு பெறும் யாழ். மரியன்னை பங்கைச் சேர்ந்த பெனடிக்ற் சதீஸ்குமார், எழுவைதீவு பங்கைச் சேர்ந்த திருச்செல்வம் குயின்சன் பெனாண்டோ அருட்பணியால் இறை பாதையைச் செப்பனிட தடம்பதிக்கும் குருமணிகளை இறை ஆசீர்வேண்டு உளமாற வாழ்த்துகிறோம்.

சபை மாகாண முதல்வரும்,
புனித பிரான்சிஸ்கன் சகோதரர்களும்.



பெயர்: எஸ்.பெவன்
ஆனைக்கோட்டை

**Address**

The Editor,
'Pathai'
Franciscan Brothers,
No. 194/ A 1. Convent Rd.
Ehala - Ja - Ela
Sri Lanka.

The Editor
Paathai,
St.Joseph Boys Home.
Illavalai.

விலை 10/=
ஆண்டு சந்தா 100/=

M-mail : Paathaicmsf@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல தலைவர்களே நாட்டுக்குத்தேவை - இளைஞனே நீ தயாரா?

# வாழ்வால் உதாரணமாகி...



*அருட்தந்தை றொகான்*

### அற்புதமான வழிகாட்டிகள் உருவாக்கிய பித்துப்பிடித்த நாகரீகம்

மேற்கூறப்பட்ட எதிர்மறை இருத்தலியலாளர்களின் கருத்தினை ஆமோதித்துச் சில பின்னைய நவீனத்துவ சிந்தனையாளர்களும், ஐரோப்பாவின் உன்னதமான உதாரண புருஷர்களால் ஐரோப்பாவில் ஒரு பித்துப்பிடித்த நாகரிகத்தையே உருவாக்க முடிந்ததாக புலம்புவர். "பைத்தியமும் நாகரிகமும், பகுத்தறி வின் காலத்தில் பித்துப்பிடித்த வரலாறு" என்ற தனது நூலில் மிஷேல் ஃபுக்கோ, சமகால ஐரோப்பாவில் அதிகரித்துள்ள பல்வேறு விதக் குற்றவாளிகள், விவகாரத்துப் பெற்றவர்கள், ஒருபாலினச் சேர்க்கையுள்ளவர்கள், திருமணமாகாத தாய்மார்கள், பலவிதமான பாலியல் தொழிலாளிகள், எய்ட்ஸ் நோயாளிகள் மற்றும் புதிய விதங்களில் மனநலம் பாதிக்கப்பெற்றவர்களையே அற்புதமான வழிகாட்டிகள்.

அதேவேளை ஐரோப்பாவின் பித்துப்பிடித்த நாகரிகத்துக்கும் மானிடத்தின் வழிகாட்டிகளின் வாழ்வுதாரணங்களுக்கும முடிச்சுப் போடுவதில் அர்த்தமில்லை என்ற விவாதங்களும் காத்திரமாக முன்வைக்கப்பட்டன.

### வழிகாட்டிகள் மனிதருக்கு அவசியமா?

ஒரு மனிதன் வாழும் சூழ்நிலை தான் அவனை உருவாக்குகிறது என்பது சமகாலத்தில் அனைத்து உளவியலாளர்களினாலும் ஏற்கப்பட்ட உண்மை. கருவில் உருவாகும் பொழுது வெற்றுப் பலகையாக (tabularasa) இருக்கின்ற மனிதமனம் இவ்வுலகில் பெறப்படும் புலனனுபவங்களின் (கேட்பவைகள், காண்பவைகள், உண்பவைகள்) ஊடாகவே அனைத்து அறிவையும், வழிமுறைகளையும் பெற்றுக்கொள்கின்றது என்பது அரிஸ்ரோட்டிலின் முடிவு.

"எந்தக் குழந்தையும் நல்ல குழந்தை தான் மண்ணில் பிறக்கையிலே" அது நல்லவனாவதும் தீயவனாவதும் அன்னை வளர்ப்பினிலே என்பது சினிமாக் கவிஞனின் விவாதம். தனது சுற்றாடலில் தான் பார்ப்பவற்றை, கேட்பவற்றை, அனுபவிப்பவற்றைக் கொணடே ஒரு குழந்தை தனது ஆளுமையை உருவாக்கிக்கொள்கிறது. எனவே ஒரு குழந்தை வாழும், வளரும் சூழலில் நல்ல வாழ்வின் உதாரணங்கள் கிடைக்கு மெனின் அக்குழந்தையும் அவ்வுதார ணங்களுக்கு உரியவர்களைப் போலவே உருவாகும் என்பது மறுக்க முடியாத உண்மை.

### வாய்ச்சொல்லில் வீரரடி

பாரதியார் வாய் வேட்டுக்காரர்களை "வாய்ச்சொல் வீரர்" என்றழைப்பார். இவர்கள் நல்ல பல விடயங்களைச் சொல்வதில் மகா வல்லவர்கள். ஆனால் இவர்கள் இயேசுவும் இப்படிப்பட்ட வாய்ச சொல் வீரர்களைப்பற்றிக் கடுந்தொனியில் சாடுகின்றார். தனது கால யூத சமயத் தலைவர்களைப் பற்றிக் கூறுகையில்,

"அவர்கள் என்னென்ன செய்யும்படி உங்களிடம் கூறுகிறார்களோ அவற்றையெல்லாம் கடைப்பிடித்து நடந்து வாருங்கள். ஆனால் அவர்கள் செய்வது போல நீங்கள் செய்யாதீர்கள். ஏனெனில், அவர்கள் சொல்வார்கள், செயலில் காட்ட மாட்டார்கள். (மத்தேயு 23:3) என்று எச்சரிக்கின்றார்.

நேர்மையான வாழ்வின் உதாரணங்களை மற்றவர்கள் நேரடியாகக் கண்டு அனுபவிப்பதனால் ஏற்படும் பாதிப்பு அல்லது தாக்கம் மிகவும் காத்திரமானது. தனது வாழ்வு உதாரணமிக்கது என்று மற்றவர்களுக்குக் கருத்துக் கூறுவது வாய் வேட்டாகும். ஆகவே நற்போதனைகள், விழுமியங்கள் பற்றிய கருத்துக்கள், அறிவுரைகள் என்பன வாய்ச்சொல்லில் அமையாது வாழ்வில் வெளிப்படுத்தப்படுவதும், வாய் வேட்டாக அமையாது வாழ்வாக மாறுவதும் இன்றியமையாததாகிறது.

இன்றைய உலகிற்கு போதனையாளர்கள் தேவையில்லை. சாதனையாளர்களே அவசியம் தேவைப் படுகிறார்கள் என்று முன்னாள் திருத்தந்தை இரண்டாம் யோவான் பவுல் தனது போதனைகளில் அடிக்கடி வலியுறுத்துவார்? இயேசு தனது அனைத்துப் போதனைகளுக்கும் தனது சாதனைகளால் சான்று பகர்ந்திருக்கின்றார். மற்றவர்களுக்குப் பணிவிடை புரிவதன் அவசியம் பற்றி வலியுறுத்த தனது சீடர்களின் பாதங்களைக் கழுவியது மிகுந்த காத்திரமான போதனையாக அமைந்தது. சீடர்களின் பாதங்களைக் கழுவியபின் "நான் செய்தது என்னவென்று உங்களுக்குப் புரிந்ததா? என்று இயேசு அவர்களைப் பார்த்துக் கேட்ட கேள்வியை இங்கு அவதானிக்க வேண்டும். (யோவான் நற்செய்தி 13:12) மகாத்மா காந்தியடிக ளின் வாழ்விலும் பல வாழ்வுதாரணங்களால் வெளிப்படுகிற காத்திரமான போதனைகள் உண்டு.

அவரது ஆச்சிரமத்தில் மற்றவர்கள் தவறுகள் செய்தால் அவர்களைத் தண்டிக்க மாட்டார். மாறாக தன்னைத்தானே உண்ணா நோன்பு, மௌனவிரதம் போன்ற செயற்பாடுகளால் வருத்திக் கொள்வார். இது தவறிழைத்தவர்களுக்குக் கொடுக்கக்கூடிய எல்லாவிதமான அறிவுரைகளிலும் மிகவும் பாதிப்பை ஏற்படுத்த வல்லதாயிருந்தது என்று அவரே சான்று பகர்ந்துள்ளார்.

### முடிவாக வழிகாட்டிகள் சக பயணிகள

வாழ்வால் உதாரணமாகி மற்ற மனிதர்களுக்கு வழிகாட்டிகளாக மாறுவதில் உள்ள உடன்பாடற்ற ருதுகோள்கள் மற்றும் அதன் அவசியத் தேவை என்பவை இங்கே சுருக்கமாக கோடிட்டுக் காட்டப்பட்டன. மனித மைய அணுகுமுறைகள் மற்ற மனிதனை நரகமாக வர்ணித்து, அற்புதமான வழிகாட்டிகளால் கூட ஐரோப்பாவில் பித்துப்பிடித்த ஒரு நாகரிகத்தையே உருவாக்க முடிந்ததாக கருத்துக்களை முன்வைத்த போதிலும், மனிதருக்கு வழிகாட்டிகள் மற்றும் வாழ்வுதாரணங்கள் அவசியமானவைகள் என்பது மறு சாராரினால் வலியுறுத் தப்பட்டமையும் அவதானிக்கப்பட்டது. முடிவாக வழிகாட்டிகள் மற்றும் வாழ்வுதாரணங்களில் உள்ள ஓர் அபாயத்தையும் சுட்டிக்காட்டுவது அவசியமாகிறது.

மற்றவர்களின் வாழ்வுதாரணங்களைக் கைக்கொள்ளத் தூண்டுவது மற்ற மனிதர்களை மாதிரிகளாக (Models) 'வீரர்களாக' (heros) ஏற்றி வைத்து, தமது சுய புத்தியை அவமதித்து அவர்களைக் கண்மூடித்தனமாகப் பின்பற்றுவதில் கொண்டுபோய் விடலாம். சினிமா நடசத்திரங்கள், விளையாட்டு வீர, வீராங்கனைகள், அரசியல் தலைவர்களை அப்படியே பின்பற்றுகின்ற அல்லது வழிபடுகின்ற (heroworship) ஒரு கலாசாரமாக இது உருவெடுக்கலாம். இப்படிப்பட்ட கலாசாரத்திற்குட்பட்டவர்களை சொரென் கீர்க்கெகாட் (Seren Kierkegegaard) இறுக்கமற்ற அல்லது சீரற்ற இருப்புடையவர்கள் என்றழைப்பார். 'பயணம் செய்யும் மனிதன்' என்ற கருத்தின் அடிப்படையில் யாரும் மற்றவர்களுக்கு மாதிரியாக அல்லது வீரனாக முடியாது.

இவ்வுலகில் மனிதர்கள் எல்லோருமே ஒரு விதத்தில் பயணிகள். ஆகவே ஒரு மனிதன் மற்ற மனிதனுக்கு சக பயணியாவான். இந்த சகபயணி (co- traveler) என்பதே எல்லாருக்கும் பொருந்தக்கூடிய பொதுவானதோர் உறவுமுறையாகும். இதன் மூலமாக மனிதன் என்றால் யார் என்ற வினாவுக்கு ஒரு புதிய விடை கிடைக்கின்றது. 'பயணம் செய்யும் மனிதன்' (homo viator) என்பது இருத்தலியல் சித்தாந்தத்தை சாதகமான முறையல் அணுகியவர்கள் கொணர்ந்த மனிதனுக்குரிய புதிய வரைவிலக்கணமாகும். இது மனிதன் ஓர் சமூக விலங்கு' என்பதற்குரிய இருத்தலியல் விளக்கமாகும். 'பயணம் செய்யும் மனிதன்' பற்றிக் கபிரியேல். மார்ஷல் (Gabriel Marcel) விளக்குகையில் மனித இருப்பு என்ற தளநிலையில் மனிதர்கள் தனித்தவர்கள் அல்லர். ஒருவரோடு ஒருவர் கைகோர்த்துச் செல்பவர்கள் என்றார்.


ஆகவே ஒவ்வொரு வாழும் அல்லது வாழ்ந்த மனிதனும் தனது சகபயணியான "மனிதனுக்கு முன்னுதாரணமாவான். நல்ல முன்னுதாரணங்களைப் பார்த்து இப்படித்தான் வாழவேண்டும் என்று கற்றுக்கொள்வதும், மெச்சத்தகாத செயற்பாடுகளைக் கொண்டுள்ளவர்களைப் பார்த்து இப்படி வாழக் கூடாது என்று கற்றுக்கொள்வதும் சிந்திக்கத் தெரிந்த ஒவ்வொரு பயணியின் கடமையாகும்".

## உயிர்ப்பு

**உண்மையான மாற்றத்தால் அவதரிப்பது**
**மாற்றத்தின் நிரந்தரத்தை உணர்த்துவது**
**நிரந்தரங்களின் கனவை உடைப்பது**
**நிகழ்வின் யதார்த்தத்தை புகட்டுவது**

**மாற்றங்கள் இன்றேல் உயிர்ப்பு இல்லை**
**பழையன கழியாது புதியன தோன்றாது.**
**உழைப்பு இன்றி மாற்றங்கள் சிந்தாது**
**உயிர்ப்பு நம்மிலும்**
**- மாற்றங்களையே தேடுகிறது**

**- திலகர்**



அ.ம.தி.களின் இளையோர், சிறுவர் மகாநாட்டில் தடம் பதித்த சிறுவர் கைவண்ணம்

# புதுவாழ்வு என்றால் என்ன?

### பொதுநிலையினர் பிரான்சிஸ்கன் சபையினரின் தியானத்தில் அருட்தந்தை இருதயதாஸ்

பொதுநிலையினர் பிரான்சிஸ்கன் சபையின் தவக்கால தியானத்தில்அருட்தந்தை இருதயதாஸ் அடிகளார் மறையுரை ஆற்றுகையில்,

எமது ஆதிப் பெற்றோரின் வாழ்வை நாம் ஒவ்வொருவரும் மீட்டுப்பார்ப்போம் அழிந்து போகும் வாழ்வை அல்ல அழியா வாழ்வுக்கே படைக்கப்பட்டோம். கிறிஸ்து உயிர்த்து எமக்குக் கொடுத்த பரிசு வாழ்வாகும். திருமுழுக்குப் பெற்ற நாம் அனைவரும் இறைவனுக்கு உகந்த வாழ்வு வாழ அழைக்கப்பட்டுள்ளோம் என்பதை எபேசியர் திருமுகத்தில் பார்க்கிறோம். மறைக்கல்வி ஆண்டில் மறைக் கல்வி என்றால் என்ன? புதுவாழ்வு என்பது யாது என்று நாம் ஒவ்வொருவரும் சிந்திப்போம். அன்பே கடவுள். புது ஆணி வேர் அன்பாகும். கற்பாறையின் மேல் கட்டப்பட்ட வாழ்வாக எமது வாழ்வு அமையவும் எமது உள்ளத்திலும் இல்லத்திலும் இயேசு நிலையாக குடியிருக்க வேண்டும். கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட வாழ்வு அன்பு நிறைந்ததாக இருக்கவேண்டும். இயேசுவை தேடிப்போவோராக இருக்கவேண்டும். இயேசுவின் சீடராக இருப்பதற்கு அன்புதான் காரணம். முதலாவதாக கடவுளை, இரண்டாவதாக அன்னை, மூன்றாவதாக அயலவரை அன்பு செய்து வாழவேண்டும். உங்கள் விண்ணகத் தந்தை நிறைவுள்ளவராக இருப்பது போல் நீங்களும் நிறைவுள்ளவராக இருங்கள். என்று தியானத்தில் அருளுரை ஆற்றினார்.

சபையின் ஆன்மீக இயக்குநர் அருட்தந்தை J.P.E செல்வராசா அடிகளார் உரையாற்றுகையில்

மீண்டும் ஒரு தவக்காலத்தை இறைவன் எமக்கு கொடுத்தமைக்காக இன்றைய நாளில் ஒவ்வொருவரும் தனித்துவமாக இறைவனைத் தேடவும் போற்றிப் புகழவும் அழைத்த தயவுக்காக நன்றி கூருவோம். இச் சபையில் எமக்குக் கிடைத்த அழைப்பானது எமக்காக இறைவனின் திட்டம் வெளிப்படுத்தப்பட்டது. எனவே நாம் ஒவ்வொருவரும் சிந்திப்போம். இறைவனின் விருப்பத்திற்கு எம்மைக் கையளித்து பிறர் வாழ்வுக்கு ஒளியாகவும் இறைவனின் சாட்சிகளாகவும் வாழ்வோம் என அழைப்பு விடுத்தார்.



இத்தியானம் அருள் ஆச்சிரமத்தில் தலைவர் எல்.சி.நீக்கிலஸ் பப்பா சிறந்தவகையில் ஒழுங்குபடுத்த பக்திப் பரவசத்துடன் ஆன்மீக பலத்தை விதைத்த தியானமாக அமைந்தது. இந்த நிகழ்வில் 200 இற்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் சமூகம் அளித்தனர்.

*தகவல்: திருமதி சற்குணராசா ஜெயமலர்.*
*3 ஆம் சபை வழிபாட்டுக்குழு*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Mission Station at Kurukkalmadam

The Franciscan Brothers are joyful and happy to say that they are celebrating the 30th anniversary of mission work at Kurukkalmadam. This mission station was started on the 25th March 1982.

The celebration will be held on 22nd of April 2012. The main celebrant will be the Rt. Rev. Dr. J .Kingsly Swampillai the Bishop of Trinco – Batticaloa. Rev. Bros. Paul Peries, S. Thobias and A. Arul and G.Marianathan were the pioneers .

Accepting the invitation of Rt. Rev. Dr. L. R. Anthony then Bishop of Trinco – Batticaloa the brothers decided to serve the people at Kurukkalmadam.

The Rt. Rev. Dr. Kingsly Swampillai welcomed the pioneer brothers and gave all the support and encouragement to start and continue the mission at Kurukkalmadam. From the biggining the brothers started doing missionary and pastoral work at Palugamam, Ambalanthurai, Kokkadicholai, Darmapuram and Kurukkalmadam and continuing up to now.

The brothers at Kurukkalmadam Mission station have further developed Assisi Illam for boys, a Boys' farm, a Pre- school at Kurukkalmadam, A day care centre at Darmapuram and Assisi Nagar.

Rev. Bro. Sebastian Miranda died in this mission station due to his sickness and old age on 23.10.1991.

Rev. Bro. Thomas J. Justus celebrated his Golden Jubilee in the year on October 4th 2011. The construction of the new church dedicated St.Francis of Assisi to mark the 50th anniversary of their catholic faith supprted by the Franciscan Brothers with the cooperation of the Pariah priests and the parishners.

When the brothers began this mission station there only 6 families and now there are nearly 45 families at Kurukkalmadam for which the brothers are thankful to the Bishop, Priests, Rev. Sisters and prisoners of Tetative and Kurukkalmadam.

*Bro. T. J. Justus CMSF*



The 150 th Anniversary of the heavenly birth of St. Eugene De Maxenod, The founder of OMI congregation at St. Patrick's College on tha 19 th of April 2012

## Life's Realities

I was engrossed
In the sight on the sea shore,
The rays of the setting sun
Piercing through a radiant sky,
Etched strange pictures on a blue and golden canvas.

A group of fishermen
Bathed in sweat and drawing their nets in,
We have worked the whole night
And have caught nothing!
Mute words, voiceless, depths unspoken.

Yet another sight of affluent company
Bathing in the glow and gleam of sunlight
After their splash and splatter in the warm tropical sea,
Relaxing as though life is to be enjoyed.
The disparity in human living
Spoke volumes and touched me to quick.

*Rer St. Fatimanayaki. A.C.*



**Happy Easter**

## St. Patrick's Apostolic Institute, Talawakelle





St. Patrick's Apostolic Institute was handed over to the Diocese of Kandy at the end of December 2012.

The Franciscan Brothers have been running this Institute for the last 25 years starting from the year 1987. The Rev. Bros: Thomas Fernando, Gratien, Fidelis Croos, Justus, Gnanapragasam, Thobias and Marianathan serving as the Directors of the Institute.

From the inception of the Institute there were over 200 students benefitted in various ways for their future life by means of formation, education from the Institute. The institute is proud to mention that it had produced some priests, religious and well to do lay leaders to the Church and to the Society.

## "Peace be with you"

Provincial Message – April 2012



As we are in the season of Easter, let us reflect on the themes of PEACE and table fellowship. As we live in an experiential world let us pray for the gift of faith in our life, for a caring attitude towards our needy brothers and sisters and for faithfulness to the teachings of Jesus Christ. Jesus greets them: "Peace be with you" (Luke 2:4-36).Peace is the blessings of wholeness and fullness of life as promised in Luke 2:14 that the glory of God is among the people of goodwill. Human life is a search for the meaning of our existence so that we may enjoy peace and fellowship. It is true that the Risen Christ no longer belongs to the earthly realm; he has entered the dimensions of God Himself, beyond time and space. That is why he could appear and disappear anytime. At this juncture, we should ask: 'Do we encounter Jesus in our day-to –day lives and experience peace of mind? As the Upanishadic chant goes: Lead me to the other side of the darkness, let us all pray to Jesus, the Risen Lord who has stolen all our weakness, human sinfulness, fragility ,fear and everything and who has overcome the deadly powers of his world , that we may live fruitfully in His Resurrection. "Depart from evil – do good – seek the peace" (Cf.Ps 34:14),"Cease to do evil.Learn to do good,search for justice, help the oppressed,be just to the orphan,plead for the widow.(Is.1:16-18)

Rabindrenath Tagore, The Indian poet, Play right and Essayist has said: "Death is not the extinguishing of the light, but rather putting out the lamp, because the dawn has come". Our life searched for this Truth and kept soaring towards its sublime heights, on the wings of his God given reason and Christian faith.As Franciscans, Our commitment is to bring light through the Gospel as we pray "where there is darkness that I may bring light" . Happy Easter to One and All! Alleluia.

## NAVODAYA HOSTEL FOR BOYS




NAVODAYA Hostel was inaugurated on 15th March 2012 at the Franciscan Brothers residence at Ekala, Ja-ela. The Eucharistic celebration was the main event of the day. Rev. Fr. Henry Silva was the celebrant and he blessed the new boys and the premises where the boys going to live.

Six new boys, The Provincial Rev. Bro. Thobias, The holy Angel Sisters from Ekala convent and Bro. Justus the Director of the NAVODAYA hostel participated in the celebration.



Name:U.Libensily



Name: A.Arnoald



Name:Y.Limojan



Name:R.Abinash



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கிளரீசியன் மறைபணியில் புதிய மும்மணிகள்

யாழ். மரியன்னை பேராலயத்தில் சித்திரை 18 ஆம் நாள் யாழ். ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை அவர்களால் திருநிலைப் படுத்தப்பட்ட யாழ். உடுவில் பங்கைச் சேர்ந்த செபஸ்தியாம்பிள்ளை சேவியர் ரவிக்காந் CMF - நெடுந்தீவு பங்கைச் சேர்ந்த மரியாம்பிள்ளை றொபேட் யேக்கப் CMF - பெரிய விளான் பங்கைச் சேர்ந்த மரியதாஸ் றெனல்ட் றூபன் CMF ஆகியோரின் திருநிலைப் பயணம் இறைபாதையை செப்பனிடும் பணிகள் சிறப்புற இறை ஆசீர் வேண்டி உளமார வாழ்த்துகிறோம்.

புனித பிரான்சிஸ்கன்
சகோதர சபையினர்

# யாவருக்கும் மறைக்கல்வி சாத்தியமாகுமா?

இவ்வாண்டு யாவருக்கும் மறைக் கல்வி நடைமுறை யாக்குவதில் யார் பொறுப்பு என்பதை பலரிடம் வினவினோம். விசித்திரமான பதில்களும் விவேகமான பதில்களும் தப்பித்தலுக்கான பதில்களும் வந்தன.

"யாவருக்கும் மறைக் கல்வி" என கோவிலில் எழுதிப் போட்டிருக்கிறோம் தானே

"மறைக்கல்வி நாங்க படிப்பிக்கிறோம் தானே"

"எங்களுக்குத் தெரியாத மறைக் கல்வியா?"

"ஞாயிறு மறைக்கல் விக்கு அனுப்புறோம் தானே"

"ஆயரின் திருமடல் படித்ததை கேக்க வில்லையா"

"இதுகள் வருகுதுகள், இதுகளுக்கு மறைக்கல்வி ஏறாது"

"ஏதும் குடுத்தாதான் வருங்கள். இப்ப எல்லாம் அப்படித்தான்"

அவையள் நடக்கிறத பாத்தா எப்படி அவையளிட்ட படிக்கிறது"

இவற்றை யார் கூறி இருப்பார்கள்? இதில் நீங்கள் யாராக இருக்கும். ஆன்மீகம் என்பது தனக்குள் தேடுவது மட்டுமல்ல. பிறருககும் பகிர்ந்து பரவுவதில் தான் கிறிஸ்துவின் சீடராக கிறிஸ்து அவர்களாக வாழ முடியும்.

மறைக்கல்வி பாடப்புத் தகங்கள், பரீட்சைகள், வகுப்புகளுக்கு அப்பாலும் வாழும் கல்வியாக்கப் புதிய வழிகளை புதிய அணுகு முறைகளைத் தேடவேண்டும். கலந்துரையாடவேண்டும். செயற்பாட்டின் வெற்றியைப் பிறருக்கு செயற்படுத்த பகிர்ந்து கொள்ள வேண்டும். இதற்கான தூண்டல் துலங்கல் தமது நிலையில் இருந்து குழுமமாகச் செயற்படுத்தலே மறைக்கல்வி யாவருக்கும் என்பதன் பொருள் துலங்கும்.

யாவருக்கும் என்பதன் பொருள் குடும்பத்தில் தொழில் தலங்களில், பாமரர் மட்டில், சிறியோர், இளையோர், முதியோர், கலைஞர்கள் மட்டில் நவீன தொடர்பாடல்களால் தொடர்பூடகங்களால் புதிய படைப்பாளிகளை உருவாக்குவதால் வெளியீடுகளை வெளியிட தூண்டுவதால் முன்னெடுக்கும் திட்டமிடல் இல்லாது யாவருக்கும் மறைக் கல்வி என உரைக்கும் விளம்பர சுவரொட்டியும் செய்வதால் மட்டும் திருப்திப்பட்டு அறிக்கை சமர்ப்பிப்பதில் ஆறுதல் படுவதில் பயனில்லை. இதுவும் பின்னடைவுக்குக் காரணமாகும்.

பண்பாட்டு கலாசார மாற்றத்துடன் ஒத்தோவுதலை வத்திக்கான ஏடு மூலம் மாற்றப்பட்டாலும் எம்மவர் நவீனம் என்ற மாயையில் "காகம் அன்னநடை நடக்கப் போய் தன்நடையும் இழந்த நிலைதான்" வளருவதை காண்கின்றோம். இதற்குத் தூரநோக்கான திட்டமிடலின்மை ஓர் காரணமாகும்.

பக்திச் சபைகள், ஆலய சபைகள், மறை அறிவுப்புக் குழுமங்கள் யாவிலும் இளமையின் தலைமைகளை காண முடியவில்லை. ஒரே நபர் பல அமைப்பிலும் இருந்து ஆட்சி செய்வதால் புதிய சிந்தனைகளால் மாற்றத்தை ஏற்படுத்த முடியவில்லை.

பொது நிலையினரின் பொற்காலம், புதுப்புனல் என்பது எல்லாம் ஆண்டறிக்கைக்காக பிரசாரப் பாதுகாக்கப்பட்டதாகவே மறைந்து விடுகின்றன. ஆலயத் திருவிழாக்கள் களியாட்டம், தனிநபர் பிரசாரப்படுத்தலுடன் ஆன்மீக அறுவடைகள் ஏதும் இன்றி தூர நோக்கமற்ற சுற்றுலாப் பவனியுடன் நிறைவடைகிறது.

நல்ல நல்ல தளங்கள், தலங்கள் சந்தர்ப்பங்கள் உண்டு. அதிலும் சில பணித் தளங்கள் முன்னுதாரணமாகவும் உண்டு. அவை மறைந்த குடத்து விளக்காக தம்பட்டம் அடிக்காத வையாக நகர்வதையும் மறுப்பதற்கில்லை. - யோகா

## கடின மனங்களை மாற்ற முடியுமா?

- அருட்பணி அன்புராஜ்

மனிதனின் மனப்போராட்டத்தின் ஓர் வடிவமே யூதாசின் பாத்திரமாக காணமுடியும். மனித மனங்களில் இரண்டுவிதமான பாத்திரங்களை உள்ளே காத்து வருகிறோம். அதில் ஒன்று சாதுவாகவும் மற்றையது கொடிய விலங்காகவும் உள்ளது.

இதனைப் பல வடிவங்கள் மூலம் இயேசுவின் சீடர்களிடம் காணமுடியும். நம்பிக்கைக்குரியவர்களாக இருப்பவர்களுக்கு இடறலுக்குட்படும் போது எதிரியாக மாறிவிடும் நிலை எம் யதார்த்த வாழ்விலும் காண முடிகிறது என கியூடெக் கரிதாஸ் நிறுவன ஊழியர்களுக்கான தவக்காலத் தியானத்தில் இயக்குநர் றெக்னோ அடிகளாரின் தலைமையில் நடைபெற்ற போது அருட்பணி அன்புராஜ் அடிகள் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் எமக்கு ஏற்றால்போல் மற்றவர்கள் செயற்பட வேண்டும் என விரும்புகிறோம் எமது செயல் மற்றவர்களைப் பாதிக்கிறதா என்பதை உணர்வதில்லை. எல்லாம் எமக்குச் சார்பாக இல்லை எனில் அதனை தவறாகக் கொண்டு பார்க்கும் பொழுது அதன் மனப் போராட்டம் பாவத்தில் வீழ்த்தி விடுகிறது.

ஆவியின் கனிகளை அனுபவிப்பதற்கு ஆன்மீகத் தேடல் அவசியமானது. எமது செயல்களில் எதனை அதிகம் பயன்படுத்தி விடுகிறோம் என எம்மை நம்மதிப்பிடும் காலம் இதுவாகும். நாம் சாதுவாகவா? கொடிய விலங்காகவா? என்பதனை எமது செயல்களே வெளிப்படுத்தி விடும்.

நல்ல கள்வன் கெட்ட கள்வன், நல்லவனாய் கெட்டவனாய் பார்ப்பதும் நற்செய்தியில் வரும் புதிய செய்தியாக உள்ளது. சீடர்களின் மறுதலிப்பும், காட்டிக்கொடுப்பும் நமது வாழ்வாலும் எதிர்கொள்ளும் சம்பவமானாலும் மன்னித்து ஏற்கும் மகத்துவம் பிறருக்காக தன்னை அர்பணிக்கும் நிலை எமது வாழ்விலும் புதிய உயிர்ப்பாக பிறக்க வேண்டும் என்றார். - நிசா

## அசிசியின் அற்புதங்கள்

மேரிநாயகி

பிரான்சீசின் செபத்தைச்செவிமடுத்த இறைவன்
அவரின் விருப்பத்தை நிறைவேற்றத் துணிந்தார்
ஆறு இறக்கைகளுடன் அக்கினி வடிவான
விண்ணவர் ஒருவர் அவர் அருகே இறங்கி வந்தார்.

சிலுவையில் அறையுண்ட யேசுவின் உருவாக
அந்த விண்ணவர் காட்சி அளித்தார்.
பிரான்சீசின் உள்ளமோ பெரு மகிழ்ச்சி அடைந்தது
யேசுவின் பார்வையோ அவரை ஊடுருவியது.

என்ன அதிசயம்! அவ்வரது உடல் துளைக்கப்பட்டது
கைகளில் இரண்டும் கால்களில் இரண்டும்
விலாவில் ஒன்றுமாய் ஐந்து காயங்களையும்
அசிசியின் பிரான்சீஸ் தனதாக்கிக் கொண்டார்.

இத்தனை நடந்தும் காயங்கள் அத்தனையும் மறைத்தார்
துன்பங்கள் அனைத்தையும் தனிமையில் சுமந்தார்
எத்தனை நாள்தான் உண்மையை மறைப்பது?
உண்மை ஒரு நாள் தெரியவந்தது.

காயத்தினின்றும் குருதி வடிவதை
சிறிய சகோதரர் கண்டு கொண்டனர்
அவரது உடல்நிலை மோசமாகியது
நடந்தே போதித்து வந்த அவரால் நடக்க முடியவில்லை.

கழுதை மீதேறி அசிசி திரும்பினார்
கழுதையிலிருந்தே போதித்து வந்தார்
அவரது கண்கள் ஒளியை இழந்தன
அந்த நிலையிலும் இறை புகழ் பாடினார்

தானே இயற்றிய ஆதவன் கீதத்தை
தானே இசையமைத்துப் பாடித்துதித்தார்
பிறர் அதைப்பாடக் கேட்டு மகிழ்ந்தார்
வாழும் புனிதராய் மட்டுமல்ல கலைஞருமாயிருந்தார்.

தமியான் ஆலயத்தைத் தரிசித்த பிரான்சீஸ்
சிறிய சகோதரிகள் சபைத் தலைவி கிளாராவை
மடத்தில் சந்தித்து உரையாடிய பின்
ஆயரைச் சந்திக்க ஆர்வமுடன் சென்றார்.

ஆயரைச் சந்திக்க அவர் சென்றவேளை
அதிகாரி ஒருவருக்கும் ஆயருக்குமிடையில்
பிணக்கொன்றிருந்ததை பிரான்சீஸ் கண்டு
பிணக்கைத் தீர்த்து சமாதானமாக்கினார்.

புனிதர் புனிதர் என மக்களால் புகழப்பட்ட
பிரான்சீசின் உடல்நிலை மோசமாகியது
அவரது குடல் ஈரல் மண்ணீரல் என்பன
பெரும் பாதிப்புக்குள்ளாகி படுக்கையில் வீழ்த்தின.

ஏழ்மையின் சின்னம் தாழ்மையின் உறைவிடம்
கீழே வெறுந்தரையில் கிழிந்த ஆடையுடன்
படுத்திருந்த காட்சியை எல்லோரும் பார்த்து
கண்களில் நீர் மல்க இறைவனை வேண்டினர்.

அருளாளர் பிரான்சீஸ் அனைவரையும் பார்த்து
ஆதவன் கீதத்தைப் பண்ணுடன் பாடச் சொன்னார்
அனைவரும் பாட அதைக் கேட்டு மகிழ்ந்தார்
தாவீதின் சங்கீதத்தைத் தானே பாடி ஆவியை ஒப்படைத்தார்.

ஆயிரத்து இருநூற்று இருபத்தாறாம் ஆண்டு
ஐப்பசித் திங்கள் மூன்றாம் நாளில்
இவரது ஆன்மா விண்ணுலகை அடைந்தது
ஆயிரத்து இருநூற்று இருபத்தெட்டு
ஆடி 18 இல் புனிதர் நிலைக்குயர்ந்தது.

1209 ல் உருவான பிரான்சீஸ்கன் சபையும்
பெண்களுக்குரிய கிளாரம்மாள் சபையும்
பொது நிலையினர்க்கான மூன்றாம் சபையும்
வறுமையின் வடிவழகன் தந்த வற்றாத ஊற்றே

பிரான்சீஸ்கன் சபையும் சேர்ந்தவர் பலர்
புகழ்பூத்த புனிதர்களாய் வாழந்து மறைந்தனர்
அவர்களில் ஒருவர் தான் புனித அந்தோனியார்
அவரது பக்தர்கள் கோடானுகோடியென்றால் மிகையாகாது.
அசீசியில் அற்புதங்கள்

ஆயிரத்து ஐநூற்று நாற்பத்து மூன்றில்
அந்நிய மண்ணிலிருந்து ஆறு குருக்கள்
எம்மண்ணில் கால்பதித்த இனிய வரலாறு
யேசுவின் அரசுக்கு அத்திவாரமிட்ட அரிய வரலாறாகும்.

வந்த குருக்கள் அருளாலயம் ஒன்றமைத்து
பிரான்சீசின் வழியைப் பின்பற்றியவராய்
இலங்கை மண்ணில் தொண்டாற்றத் தொடங்கி
அவரது சபையை விஸ்தரித்தார்.

அறிவாலயங்களைக் கட்டி எழுப்பி
அறியாமை அகற்றி நற்செய்தி பரப்பினார்
ஆஸ்பத்திரிகளும் ஆங்காங்கே நிறுவி
நோயுற்றோரையும் பாரமரித்து வந்தனர்.

பிரான்சீஸ் விட்டுச் சென்ற வறுமையின் சபையால்
மக்கள் மனதில் புத்துணர்ச்சி பிறந்தது
இறையரசின் பித்து மனதில் பதிந்தது
வறுமையின் சபை கிளைவிட்டு வளர்ந்தது.

இன்றைய உலகில் வாழும் மக்களோ
வறுமையின் பெருமையை உணர மறுத்து
பகட்டு வாழ்க்கையில் மனதைப் பறிகொடுத்து
திருட்டுத் தொழிலையும் தமதாக்கின்றனர்.

பிரான்சீஸ் பேணிய வறுமையின் பெருமையை
இன்றைய உலகம் அடியோடு மறந்து
ஆடம்பரத்தை தேடி அலைந்து
அழிவுப் பாதையில் போவதைக் காண்கிறோம்.

வறுமையின் புனிதர் காட்டிய பாதையை
சிறிதும் பேண மறுக்கும் நம்மவர்
பெருமையைத் தேடி அழிவுப் பாதையில்
போகின்ற அவலம் பெரும் துரதிஷ்டமே:

பிரான்சீஸ் நிறுவிய வறுமையின் சபை
ஆல்போல் தழைத்து அனைவரையும் தாங்க
யேசுவின் அன்பரசை இவ்வுலகில் நிலைநாட்ட
புனிதர் பிரான்சீசைப் பின்பற்றி வாழுவோம். (முற்றும்)

**அறுவடையோ மிகுதி வேலையாட்களோ**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org